# தினபூமி

thinaboomi.com

பூமி: 26 சுற்று : 188 மார்கழி 03

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், வியாழன், டிசம்பர் 18, 2025 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை சந்தித்து பேச்சு**

....2-ம் பக்கம்

**சொந்த ஊரில் இருப்பது போல் உணர்கிறேன்: எத்தியோப்பியா பார்லி.,யில் பிரதமர் மோடி உரை**

...3-ம் பக்கம்

**டி-20 தரவரிசை: அதிக புள்ளிகள் பெற்ற முதல் இந்திய வீரராக வருண் சக்ரவர்த்தி சாதனை**

....6-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுவின் 3-வது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், எஸ்.எஸ்.சிவசங்கர், டி.ஆர்.பி.ராஜா, மாநில திட்டக்குழு செயல் துணைத்தலைவர் ஜெயரஞ்சன், நிலையான கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்தின் இயக்குநர் பேராசிரியர் ரமேஷ் ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசுத் துறையின் செயலாளர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடந்த 4 ஆண்டுகளில் முதலீட்டாளர் மாநாடுகள் மூலமாக

# இதுவரை ரூ.11.40 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு

## தமிழ்நாடு அரசு பெருமிதம்

சென்னை, டிச. 18-

**தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 16 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ள நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, முதலீட்டாளர் மாநாடுகள் மூலமாக கடந்த 4 ஆண்டுகளில் ரூ.11.40 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.**

**பொருளாதாரம் வளர்ச்சி**

சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நம்முடைய தமிழ்நாடு முதல்வரின் தொலைநோக்கு சிந்தனைகளால் அவருடைய தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியினுடைய புதிய தொழில் கொள்கைகளால் வரக்கூடிய 2030-ம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை நாம் எட்டுவோம் என்கின்ற மாபெரும் இலக்குடன் செயல்பட்டு கொண்டிருக்கிறோம். முதல்வரின் முன்னெடுப்புகளால் தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம் வளர்ச்சி இன்றைக்கு ஒரு மிகக் குறிப்பிடத்தக்க சிறப்பான ஒரு உச்சத்தை தொட்டிருக்கிறது.

எனவே நம்முடைய ஜிஎஸ்டிபி - மாநில ஒட்டு மொத்த உற்பத்தி மதிப்பு இன்று உயர்ந்துள்ளது. 2023 - 24 ஆண்டுகளில் ரூ.26.88 லட்சம் கோடியாக இருந்த தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த ஆண்டு அதாவது 24 - 25 ஆம் நிதியாண்டில் 31.19 லட்சம் கோடிகளாக இருந்தது, அது உயர்ந்து 16 சதவீதம் வளர்ச்சியை நாம் இன்றைக்கு அடைந்திருக்கிறோம் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களோடு நான் பகிர்ந்து கொள்கிறேன்.

**மாபெரும் வெற்றியாகும்**

நம்முடைய ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவுடைய தரவுகளின் வாயிலாக கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த வளர்ச்சி விகிதம் நம்முடைய முதலமைச்சருடைய தலைமையிலான தமிழ்நாடு அரசினுடைய நிதி நிர்வாக மேம்பாட்டிற்கும், தமிழ்நாடு அரசினுடைய சிறப்பான நடவடிக்கைக்கும் கிடைத்திருக்கக் கூடிய மாபெரும் வெற்றியாகும். இத்தகைய உயர் வளர்ச்சி விகிதம் என்பது கடந்த மூன்று ஆண்டுகளாகவே தொடர்ந்து இருக்கிறது. 2021 - 22 ஆம் ஆண்டிலே நாம் பொறுப்பெற்ற காலத்திலே 15 .91% ஆகவும், அதேபோல 22 - 23 ஆம் ஆண்டுகளிலே 14.47% ஆகவும் அதைபோல 23- 24ஆம் ஆண்டுகளிலே 13.34% ஆகவும் தொடர்ச்சியாக நம்முடைய முதல்வர் ஆட்சி பொறுப்பேற்றதற்கு

(கடைசி பக்கம் பார்க்க)

### பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்ள

# தமிழகத்திற்கு மத்திய அரசு வழங்கியது ரூ.4,130 கோடி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, டிச. 18-

**கடந்த 4 ஆண்டுகளில் பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு கேட்ட நிதியில் 17 சதவீதம் நிதியை மட்டுமே மத்திய அரசு அளித்துள்ளது. ரூ.24,670 கோடி நிதி கேட்டதில் ரூ.4,130 கோடியை மட்டுமே கொடுத்துள்ளது என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டில் அரசின் தொடர் நடவடிக்கையால் அலையாத்தி காடுகளின் பரப்பளவு 2 மடங்கு அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

**முதல்வர் தலைமையில்**

சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுவின் 3-வது கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் காலநிலை மாற்ற இயக்கத்திற்கு கொள்கை சார்ந்த வழிகாட்டுதலை வழங்குவது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டது. கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

**வெப்பநிலையை குறைக்க...**

காலநிலை தொடர்பாக மாவட்ட அளவில் நடத்தப்படும் ஒருநாள் முகாம், இனி 2 நாட்கள் நடத்தப்படும். பசுமை பள்ளி வகுப்பறைகளில் வெப்பநிலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். நமது அரசுக்கு வளர்ச்சி ஒரு கண் என்றால், இயற்கை வளங்களை பாதுகாப்பது மற்றொரு கண். காலநிலை மாற்றத்தின் விளைவுகளை கண்கூடாக பார்த்திருக்கிறோம்; அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் டித்வா புயல் பாதிப்பில் இருந்து தமிழகத்தை பாதுகாத்துள்ளோம்; மிக விரைவில் காலநிலை கல்வியறிவு குறித்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

**மின்சாரப் பேருந்துகள்.**

சென்னையில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. மக்கள் அதிகளவில் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவதுதான் நெரிசலைக் குறைக்க சிறந்த வழி. அதை ஊக்குவிக்கதான் 120 மின்சாரப் பேருந்துகளை கொண்டு வந்துள்ளோம். இதற்கு நல்ல வரவேற்பு இருப்பதால், மேலும் 600 மின்சாரப் பேருந்துகளை பயன்பாட்டுக்கு கொண்டு வரவுள்ளோம். இதனால் நெரிசலும், மாசுவும் குறையும்.

**17 சதவீதம் நிதியை....**

கடந்த 4 ஆண்டுகளில் பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு கேட்ட நிதியில் 17 சதவீதம் நிதியை மட்டுமே மத்திய அரசு அளித்துள்ளது. ரூ.24,670 கோடி நிதி கேட்டதில் ரூ.4,130 கோடியை மட்டுமே கொடுத்துள்ளது. எத்தனையோ பேரிடர்களை எதிர்கொண்டு தமிழ்நாடு வென்றுள்ளது. அதேபோல் காலநிலை மாற்ற சவாலையும் எதிர்கொண்டு தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். இவ்வாறு அவர் கூறினார்.

பெரும் சேதம் தவிர்ப்பு...

இந்தியாவிற்கே வழிகாட்டும் நிலையில் தமிழ்நாடு உள்ளது. எப்போதாவது புயல் தாக்கும் என்ற நிலையை நாம் தாண்டிவிட்டோம். காலநிலை மாற்றத்தின் விளைவுகளை கண்கூடாக பார்க்கிறோம். டித்வா புயலின் கோரத் தாண்டவத்தை பார்த்தோம். அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் டித்வா புயலால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. பேரிடரால் இலங்கை உள்ளிட்ட நாடுகள் எப்படி பாதிக்கப்பட்டுள்ளன என்பதை பார்த்தோம். பள்ளி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். 297 பசுமை பள்ளிகளில் கூல் ரூஃப் திட்டம் செயல்படுத்தப்படும்.

**2 மடங்கு அதிகரிப்பு...**

தமிழ்நாட்டில் அலையாத்தி காடுகளின் பரப்பளவு 2 மடங்கு அதிகரித்துள்ளது. மிக விரைவில் காலநிலை கல்வி அறிவு குறித்த பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. கால நிலை மாற்றம், நெகிழி ஒழிப்புக்காக 200 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இ-ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன. திராவிட மாடல் அரசு பெண்களுக்கான அரசாக எல்லா துறைகளிலும் பெயர் வாங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

### வரைவு வாக்காளர் பட்டியல் வெளியான பிறகு

# இறந்தவர்கள், இடம் பெயர்ந்தவர்களின் விவரங்கள் இணையதளத்தில் வெளியீடு

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, டிச. 18-

**வரும் 19-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் இறந்தவர்கள், இடம் பெயர்ந்தவர்களின் விவரங்கள் மாவட்ட இணையதளங்களில் வெளியிடப்படும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நடைபெற்று வருகின்றது. இதன் ஒரு பகுதியாக, வரைவு வாக்காளர் பட்டியல் 19-ம் தேதி வெளியிடப்பட உள்ளது. இந்த நடவடிக்கையானது, எந்த தகுதியான வாக்காளரும் வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபட்டு விடக்கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் உறுதிப்பாட்டினைப் பின்பற்றும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டுக்கு முந்தைய காலகட்டத்தில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறை சென்று அணுகியபோதும் தொடர்பு கொள்ள முடியாத வாக்காளர்கள் அதாவது இறந்தவர்கள், கண்டறிய இயலாத மற்றும் முகவரியில் இல்லாத வாக்காளர்கள், இடம் பெயர்ந்தவர்கள், இரட்டை பதிவு செய்த வாக்காளர்கள் என குறிக்கப்பட்ட வாக்காளர்களின் வாக்குச்சாவடி வாரியான பட்டியலை தயாரித்து உள்ளனர்.

இந்த பட்டியல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் பகிரப்பட்டுள்ளன. வரும் 19-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் இறந்தவர்கள், கண்டறிய இயலாத மற்றும் முகவரியில் இல்லாத வாக்காளர்கள், இடம் பெயர்ந்தவர்கள், இரட்டை பதிவு செய்த வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களின் விவரங்களை அணுகுவதற்கான வசதி, அந்தந்த மாவட்ட இணையதளங்களில் வெளியிடப்படும். பொதுமக்கள் தங்களது விவரங்களை தேவைப்படின் இந்த பட்டியலில் சரிபார்த்துக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜல்லிக்கட்டு போட்டிகான வழிகாட்டு நெறிமுறைகள்

## தமிழ்நாடு அரசு வெளியிட்டது

சென்னை, டிச. 18-

**ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழியில் மட்டுமே அனுப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.**

பொங்கல் மற்றும் தமிழர் திருவிழாவை முன்னிட்டு கால்நடை பராமரிப்புத் துறை செயலர் சுப்பையன் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளார். அதில் இடம்பெற்றுள்ளவை பின்வருமாறு., மாவட்ட ஆட்சியர்களிடம் முன்கூட்டியே அனுமதி பெறாமல் ஜல்லிக்கட்டு உள்பட எந்த போட்டிகளையும் நடத்தக் கூடாது. விலங்கு வதை தடுப்புச் சட்ட விதிகளுக்கு இணங்க போட்டிகளை நடத்த அனுமதி வழங்க வேண்டும்.முன்கூட்டியே அறிவிப்பு வெளியிடாமல் எந்த போட்டியும் நடத்த ஒப்புதல் அளிக்கக் கூடாது.

விலங்கு வதை தடுப்பு சட்டத்தின் விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி காளைகள் மற்றும் கால்நடைகளுக்கு எந்த விதமான தீங்கும் ஏற்படாத வகையில் ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டும். காளைகள் துன்புறுத்தப்படாமல் இருப்பதையும், பாதுகாப்பாக இருப்பதையும் உறுதி செய்வது அவசியம்.ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதற்காக அதில் தொடர்புடைய துறைகள் அனைத்திலும் அதிகாரப்பூர்வ குழுக்கள் முன்கூட்டியே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த போட்டிகளில் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் அதுதொடர்பான விழிப்புணர்வையும், புரிதலையும் ஏற்படுத்துவது முக்கியம்.போட்டி நடைபெறுவதற்கு முன்னதாகவே அனைத்து ஏற்பாடுகளையும் முழுமையாக செய்திருக்க வேண்டும். ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழியில் மட்டுமே அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் போதே காப்பீட்டு ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்துவது அவசியம். ஜல்லிக்கட்டுக்கு தொடர்பு இல்லாத இடங்களில் அத்தகைய போட்டிகள் நடத்தக் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.தேவையற்ற குழப்பங்கள், தவறுகளைத் தவிர்க்கவும், ஒழுங்குமுறையுடன் போட்டிகளை நடத்தவும், விதிகளை சரிபார்க்கும் பட்டியலின்படி (செக் லிஸ்ட்) செயல்படுதல் வேண்டும். போட்டி களத்திலிருந்து காளைகள் வெளியேறும் இடத்தில் கால்நடை மருத்துவக் குழுக்கள் தயார் நிலையில் இருத்தல் அவசியம்.தேவைப்படும் காளைகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சைகளை அவர்கள் வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எத்தியோப்பியாவின் உயரிய விருது: பிரதமர் மோடிக்கு வழங்கி கவுரவம்

அடிஸ் அபாபா, டிச. 18-

**பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. அந்நாட்டின், தி கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா என்ற உயரிய விருது அவருக்கு அளிக்கப்பட்டது. பிரதமருக்கு, எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது இந்த விருது வழங்கி கவுரவித்து உள்ளார். விருதை 140 கோடி இந்தியர்களுக்கு அர்ப்பணிக்கிறேன் என்று பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.**


பிரதமர் மோடியின் 3 நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக அவர் எத்தியோப்பியாவுக்கு நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றார். எத்தியோப்பியாவில் பிரதமர் மோடி 2 நாள் அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார். இதன்படி அந்நாட்டுக்கு சென்ற அவரை அந்நாட்டின் பிரதமர் அபி அகமது அலி விமான நிலையத்தில் வரவேற்றார். பின்னர் அவரை தன்னுடன் காரில் அழைத்து சென்றார். எத்தியோப்பிய பிரதமர் அபி அகமதுவுடனான சந்திப்பின் போது பேசிய பிரதமர் மோடி, ஆயிரம் ஆண்டுகளாக இரு நாடுகளும், தகவல் தொடர்பு, பரிமாற்றம் உள்ளிட்டவற்றில் ஈடுபட்டு வந்துள்ளன.

நம்முடைய இரு நாடுகளின் ஒத்துழைப்பில், பொருளாதாரம், புதிய கண்டுபிடிப்பு, தொழில் நுட்பம், பாதுகாப்பு, சுகாதாரம், திறன் கட்டமைப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பு போன்றவற்றின் முக்கிய அம்சங்களில் விரிவாக கலந்து ஆலோசனை மேற்கொள்வதற்கான ஒரு வாய்ப்பை இன்று நாம் பெற்றுள்ளோம். இந்தியாவில்,

(கடைசி பக்கம் பார்க்க)




**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -120.21 | -41.55 |
| பாயின்ட் 84,559.65 | பாயின்ட் 25,818.55 |



**தங்கம்**
1 சவரன் ₹99,200
1 கிராம் ₹12,400



**வெள்ளி**
1 கிலோ ₹222,000
1 கிராம் ₹222.00

**டாலர்** ₹90.39

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுடன் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் சந்திப்பு

## இருநாட்டு உறவு குறித்து ஆலோசனை

**ஜெருசலேம், டிச. 18-**

2 நாட்கள் அரசு முறை பயணமாக இஸ்ரேல் சென்றுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், அங்கு பிரதமர் நெதன்யாகுவை சந்தித்து பேசினார்.



இஸ்ரேல் சென்றுள்ள ஜெய்சங்கர் தலைநகர் ஜெருசலேமில் இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக்கை சந்தித்தார். மேலும், இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் கில்டான் சார், தொழில் துறை அமைச்சர் நிர் பர்கட்டை ஜெய்சங்கர் சந்தித்தார். இந்நிலையில், ஜெய்சங்கர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்தார். இந்த சந்திப்பின் போது இருநாட்டு உறவு, பாதுகாப்பு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். அதேவேளை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியா வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அவர் பிரதமர் மோடியை சந்திக்க உள்ளார்.

# மீண்டும் உயர்ந்த தங்கம் விலை: புதிய உச்சத்தில் வெள்ளி விலை

**சென்னை, டிச. 18-**

தங்கம் விலை நேற்று மீண்டும் உயர்ந்து ஒரு சவரன் ரூ.ஒரு லட்சத்தை நெருங்கியுள்ளது. வெள்ளி விலையோ வரலாறு காணாத புதிய உச்சம் தொட்டுள்ளது. தங்கம் விலை ஒரு கிராம் தங்கம் ரூ.12,400-க்கும், சவரன் ரூ.99,200-க்கும், வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.11 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.222-க்கும். ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 22 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

தங்கம் விலை மீண்டும் கட்டுக்கடங்காமல் ஏறத் தொடங்கியது. கடந்த 12-ம் தேதியில் இருந்து அதன் விலை தாறுமாறாக ஏற்றம் கண்டது. கடந்த 11-ம் தேதி ஒரு சவரன் ரூ.96,400 என்று இருந்த நிலையில், 12-ம் தேதி ஒரே நாளில் சவரனுக்கு ரூ.2,560 உயர்ந்து ஒரு சவரன் ரூ.98 ஆயிரத்து 960-க்கு விற்பனை ஆனது.

இதன் தொடர்ச்சியாக கடந்த 3 நாட்களுக்கு முன் மட்டும் சவரனுக்கு ரூ.1,160 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 120-க்கு விற்றது. இதன் மூலம் தங்கம் இமாலய உச்சத்தை தொட்டது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் விலை உயர்ந்த போதே தங்க வியாபாரிகள் ஆண்டு இறுதிக்குள் ஒரு சவரன் ரூ.1 லட்சத்தை தாண்டிவிடும் என்று சொன்னார்கள். அது நேற்று முன்தினம் நிஜமாகிப் போனது.

அமெரிக்க மத்திய பெடரல் வங்கி வட்டி விகிதத்தை குறைத்ததன் விளைவுதான் கடந்த ஒரு வாரமாக தங்கம் ஏற்றத்துக்கு முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது. மேலும் விலை அதிகரிக்கும் என சொல்லப்பட்ட நிலையில், ஒரே நாளில் நேற்று முன்தினம் விலை குறைந்து காணப்பட்டது. கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 515-க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 120-க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்று முன்தினம் நிலவரப்படி, கிராமுக்கு ரூ.165-ம், சவரனுக்கு ரூ.1,320-ம் குறைந்து ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 350-க்கும், ஒரு சவரன் ரூ.98 ஆயிரத்து 800-க்கும் விற்பனை ஆனது. இதன் மூலம் தங்கம் விலை மீண்டும் ரூ.1 லட்சத்துக்கு கீழ் வந்தது.

தங்கம் விலையை போல, வெள்ளி விலையும் கிடுகிடுவென உயர்ந்து வந்தது. கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.215-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 15 ஆயிரத்துக்கும் என இது வரை இல்லாத உச்சத்தில் விற்கப்பட்டது. நேற்று முன்தினம் கிராமுக்கு ரூ.4-ம், கிலோவுக்கு ரூ.4 ஆயிரமும் குறைந்து ஒரு கிராம் ரூ.211-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 11 ஆயிரத்துக்கும் விற்பனை ஆனது.

இந்நிலையில் தங்கம் விலை நேற்று மீண்டும் உயர்ந்து விற்பனையானது. அதன்படி கிராமுக்கு ரூ.50-ம், சவரனுக்கு ரூ.400-ம் உயர்ந்து, ஒரு கிராம் தங்கம் ரூ.12,400-க்கும், சவரன் ரூ.99,200-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை வரலாறு காணாத புதிய உச்சத்தை எட்டி உள்ளது. இதன்படி வெள்ளி விலை கிராமுக்கு ரூ.11-ம், கிலோவுக்கு ரூ.11 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.222-க்கும். ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 22 ஆயிரத்திற்கும் விற்பனையானது.

## திருப்பரங்குன்றம் வழக்கில்

# மேலும் மனுதாக்கல் செய்ய ஐகோர்ட் அனுமதி மறுப்பு

**மதுரை, டிச. 18-**

திருப்பரங்குன்றம் வழக்கில் மேலும் மனுதாக்கல் செய்ய மதுரை ஐகோர்ட்டு அனுமதி மறுத்துள்ளது.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு மனு விசாரணையில் நாம் தமிழர் கட்சி நிர்வாகி சார்பில் இடையீட்டு மனு தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று மதுரை ஐகோர்ட்டு டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகள் ஜெயச்சந்திரன், ராமகிருஷ்ணன் ஆகியோரிடம் நேற்று வக்கீல் அருணாசலம் என்பவர் முறையிட்டார்.

அவரது கோரிக்கையை நீதிபதிகள் ஏற்க மறுத்துவிட்டனர். ஆனாலும் அவர் தன் மனுக்களை விசாரணைக்கு ஏற்க வேண்டும் என வலியுறுத்தினார். இதனால் கோர்ட்டு வளாகத்தில் பணியில் இருந்த மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்களை அழைத்து வக்கீல் அருணாசலத்தை கோர்ட்டில் இருந்து வெளியேற்றுமாறு நீதிபதிகள் அறிவுறுத்தினர். அவர் மீது பார் கவுன்சில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தனர்.

மேலும், நீதிபதிகள், இந்த வழக்கில் தேவையான மனுதாரர்கள் இணைந்துவிட்டனர். தனி நீதிபதியிடம் இருந்த வழக்கு விசாரணையின் போது யாரெல்லாம் இணை மனுதாரராக இணைந்தார்களோ அவர்களை மட்டுமே மேல்முறையீட்டு மனு விசாரணையில் சேர்க்க முடியும்.

இந்த வழக்கு மிகவும் முக்கியமான வழக்கு என்பதால் அனைவரையும் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என ஏற்கனவே தெரிவித்து இருந்தோம். அதை மீறி இவ்வாறு செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்று எச்சரித்தனர்.

# ரஷ்யாவில் மாணவன் குத்திக்கொலை

**மாஸ்கோ, டிச. 18-**

ரஷ்யாவின் தெற்கே செல்யாபின்ஸ்க் நகரில் கடந்த ஆண்டு, கத்தியலால் மாணவன் ஒருவன் தாக்கியதில் 4 பேர் காயமடைந்தனர். ஒரு மாணவன் பரிதாபமாக உயிரிழந்தான்.

ரஷ்யாவின் மாஸ்கோ நகரில் ஒடின்ட்சோவோ மாவட்டத்தில் கோர்கி-2 என்ற கிராமத்தில் படித்து வரும் மாணவன் திமோதி (வயது 15). சரியாக படிக்கவில்லை என்பதற்காக ஆசிரியர் இந்த சிறுவனை கண்டித்துள்ளார். இதில் அந்த மாணவன் ஆத்திரத்தில் இருந்துள்ளான்.

இந்நிலையில், திமோதி பள்ளிக்கு வந்தபோது பையில் கத்தியை மறைத்து எடுத்து சென்றுள்ளான். ஆசிரியை ஒருவரிடம் எந்த நாட்டை சேர்ந்தவர் நீங்கள்? என கேட்டிருக்கிறான். அப்போது, டிமிட்ரி பாவ்லவ் (வயது 32) என்ற பள்ளி பாதுகாவலர் சம்பவ பகுதிக்கு வந்துள்ளார். அவரை பார்த்ததும், பையில் இருந்த மிளகு ஸ்பிரேவை எடுத்து திடீரென டிமிட்ரியின் முகத்தில் அடித்துள்ளார்.

இதனால், அதிர்ச்சியடைந்து சரிந்து கீழே விழுந்த அவரை கத்தியால் தாக்கியுள்ளான். இதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இதுதவிர, அந்த கட்டிடத்தில் இருந்த வேறு சில மாணவர்களையும் கத்தியால் குத்தியுள்ளான். இந்த சம்பவத்தில் 10 வயது மாணவன் பலியாகி உள்ளான். அந்த சிறுவனின் உடலின் முன்னால் திமோதி செல்பி எடுத்துக்கொண்ட கொடூரமும் நடந்துள்ளது. இதுபற்றிய வீடியோவும் வைரலானது. இதனை பார்த்து அதிர்ச்சியடைந்த மற்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வகுப்பறைகளுக்குள் சென்று தஞ்சமடைந்தனர். திமோதி அணிந்திருந்த டி-சர்ட்டில் உயிர்கள் முக்கியம் இல்லை என எழுதப்பட்டு இருந்தது. முககவசம் மற்றும் ஹெல்மெட் அணிந்து பள்ளிக்கு சென்றுள்ளான். ரஷ்யாவில் பள்ளிகளில் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பது அரிது. எனினும், சமீப ஆண்டுகளாக பள்ளியில் தாக்குதல் நடத்துவது அதிகரித்து உள்ளது. கடந்த ஆண்டு, ரஷ்யாவின் தெற்கே செல்யாபின்ஸ்க் நகரில் சுத்தியலால் மாணவன் ஒருவன் தாக்கியதில் 4 பேர் காயமடைந்தனர்.

# சனாதன கும்பலை கண்டித்து டிச. 22-ம் தேதி ஆர்ப்பாட்டம்

## திருமாவளவன் அறிவிப்பு

**சென்னை, டிச. 18-**

மதவெறி அரசியலைப் பரப்பும் சனாதனக் கும்பலைக் கண்டித்து டிசம்பர் 22 அன்று மதுரையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- கார்த்திகை மாதத்தின் போது திருப்பரங்குன்றம் மலையின் மீதுள்ள உச்சிப்பிள்ளையார் கோவிலில் தீபம் ஏற்றுவது கடந்த நூறாண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ள வழக்கமாகும். அதற்குப் பதிலாக அந்த மலை மீது இருக்கும் சிக்கந்தர் தர்காவுக்கு அருகில் தீபம் ஏற்ற வேண்டும் என்று சமூகப் பிரிவினைவாத சனாதன சக்திகள் பிரச்சினைகளை எழுப்பி வருகின்றன.

இது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கை உயர் நீதிமன்றம் 1996 இல் தள்ளுபடி செய்துவிட்டது. "எங்கே தீபம் ஏற்ற வேண்டும் என்பதை இந்து சமய அறநிலையத் துறை தான் முடிவு செய்யும்" என்று தீர்ப்பளித்து விட்டது. ஏற்கனவே உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டத் தீர்ப்புகள்; இதுவரை அரசாங்கம் பின்பற்றி வந்த நடைமுறைகள்; நூறாண்டுகளுக்கும் மேலாகப் பின்பற்றப்படும் வழக்கம் - இவை அனைத்தையும் புறக்கணித்துவிட்டு எந்தவித சட்ட ஆதாரமும் இல்லாமல் தர்காவுக்கு அருகில் தீபம் ஏற்றலாமென தனி நீதிபதி பிறப்பித்த ஆணை, இப்போது தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் பிரச்சினையாக உருமாறியுள்ளது.

திருப்பரங்குன்றத்தில் மத நல்லிணக்கத்தையும், அமைதியையும் சீர்குலைக்க முயற்சிக்கும் மதவெறி சனாதன சக்திகளை முறியடித்துத் தமிழ்நாட்டைப் பாதுகாப்பது ஜனநாயக சக்திகளின் கடமையாகும். அத்துடன், தற்போது நடைமுறையில் உள்ள நீதிபதிகள் நியமனத்துக்கான 'கொலிஜியம்' முறையை மாற்றிவிட்டு, அரசியல் தலையீடு இல்லாத புதிய முறை ஒன்றை உருவாக்கும்படி இந்திய மத்திய அரசை வலியுறுத்த வேண்டியதும் அவசியமாகியுள்ளது. இந்த இரண்டு நோக்கங்களின் அடிப்படையில் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியால் ஒருங்கிணைக்கப்படுகிறது. இதில் அனைத்து சனநாயக சக்திகளும் பங்கேற்குமாறு அழைக்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் பனிமூட்டம் எதிரொலி: சென்னையில் 11 விமானங்கள் ரத்து


**சென்னை, டிச. 18-**

சென்னை விமான நிலையத்தில் புறப்பாடு, வருகை என மொத்தம் 11 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

டெல்லி மற்றும் வட மாநிலங்களில் கடுமையான பனிமூட்டம் நிலவி வருகிறது. இதனால் டெல்லி விமான நிலையத்தில், விமானங்கள் தரை இறங்க முடியாமல் வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன. இந்நிலையில் டெல்லி உள்ளிட்ட வடமாநிலங்களில் நிலவும் கடும் பனிமூட்டத்தால் சென்னையில் 11 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதன்படி சென்னையில் இருந்து டெல்லி, ஜெய்ப்பூர், கொல்கத்தா செல்லும் 4 விமானங்கள் ரத்து செய்யப்பட்டதுடன், டெல்லி, பாட்னா உள்ளிட்ட இடங்களில் இருந்து சென்னைக்கு வரவேண்டிய 7 விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் பரிதவிப்புக்கு ஆளானார்கள். எனினும், விமானங்கள் ரத்து குறித்து பயணிகளுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**18-12-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** நியாயமாக நடக்க முயலுங்கள். கோபத்தால் குழப்பங்கள் ஏற்படலாம். மனைவியின் கலகத்தால், உறவுகள் பகையாகும். அக்கம் பக்கத்தாருடன் அளவாகப் பழகுங்கள்.

**ரிஷபம்:-** மகிழ்ச்சி மிக்க மணவாழ்க்கை, பெற்றோர்களால் ஆதாயம் ஆகியவை ஏற்படும். வீடு மற்றும் வாகனங்கள் வாங்குவீர்கள். விவசாய நிலங்களால் இலாபம் ஏற்படும்.

**மிதுனம்:-** கல்வி நிலை உயரும். ஆரோக்கியம் பெருகும். தைரியம் கூடும். பயணம் செய்ய விரும்புவீர்கள். புதிய சூழ்நிலைகள் உருவாகும். பொதுச் சேவையில் ஈடுபடுவீர்கள்.

**கடகம்:-** வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் இருக்காது. எடுத்தகாரியங்களில் வெற்றியின்மை அல்லது தடைகள் ஏற்படலாம். அதிக செலவுகள் காரணமாகப் பண இழப்பு ஏற்படலாம்.

**சிம்மம்:-** பெண்களால் இழப்பு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பெருகும். தவணை முறையில் பொருள்கள் வாங்க நேரும். பணயிழப்பால் மனக்கவலைகள் ஏற்படும்.

**கன்னி:-** தனலாபம் அதிகரிக்கும். புதிய நட்பு மலரும். எதிர்பாலர்பால் ஈர்ப்பும், இன்பமும் ஏற்படும். மனத்தெம்பும் மகிழ்ச்சியும் நிலவும். தொழில் ஆர்வத்தால் ஆதாயம் பெருகும்.

**துலாம்:-** தொழில் மற்றும் வியாபாரத்தில் நிலையற்ற தன்மைகளே நிலவும். குடும்ப நிம்மதி குறையும். பண இழப்பைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்கவும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** தனவரவு கூடும். ஆரோக்கியம் மேம்படும். ஆடை, அணிகலன்கள், படுக்கை சுகங்கள் கூடும். நல்ல நண்பர்களின் தொடர்பு மகிழ்ச்சி தரும். நல்லுணவு கிடைக்கும்.

**தனுசு:-** கட்டுக்கடங்காத செலவுகள் காரணமாகப் பண இழப்புக்கள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களிடம் கருத்துவேறுபாடு ஏற்பட மனமைதி குறையும். விபத்துக்களால் காயங்கள் ஏற்படலாம்.

**மகரம்:-** பலவழிகளிலும் இலாபம் பெருகும். திருமணம், நண்பர்கள் சந்திப்பு ஆகியவற்றால் இன்பமும், சந்தோஷமும் பெருகும். தனவருமானம், பெண்களால் முன்னேற்றம் ஏற்படும்.

**கும்பம்:-** மனைவியின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். அதிகாரம் மிக்க உயர்பதவிகளை ஆடைவீர்கள். திருமண காலம் கைகூடும். பொதுச் சேவைகளில் நாட்டம் ஏற்படும். சிறு பயணங்கள் ஏற்படலாம்.

**மீனம்:-** கடவுள் பக்தி அதிகரிப்பதின் காரணமாக கோவில் திருப்பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். உல்லாசப் பயணங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும்.




**முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் ஜோ.அருண், துணைத்தலைவர் இறையன்பன் குத்தூஸ் மற்றும் உறுப்பினர்கள் சந்தித்து, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சிறுபான்மையின மக்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்து அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் - 38 மாவட்ட கள ஆய்வு அறிக்கை 2025"-யை வழங்கினார்கள்.**

# பொதுப்போக்குவரத்தை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை

**சென்னை, டிச. 18-**

பொதுப் போக்குவரத்தை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சி மன்றக்குழு கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: சென்னையில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது. மக்கள் அதிகளவில் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவது தான் நெரிசலைக் குறைக்க சிறந்த வழி. பொது போக்குவரத்தை பயன்படுத்துவதை ஊக்குவிக்கதான் 120 மின்சாரப் பேருந்துகளை கொண்டு வந்துள்ளோம். மின்சார பேருந்துகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால், மேலும் 600 மின்சாரப் பேருந்துகளை பயன்பாட்டுக்கு கொண்டு வர உள்ளோம். இதனால் நெரிசலும் மாசும் குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

## திருப்பரங்குன்றம் மலை தீபத்தூண் வழக்கு:

# உள்நோக்கத்துடன் 144 தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை

## ஐகோர்ட் கிளையில் தலைமை செயலாளர் விளக்கம்

**மதுரை, டிச. 18-**

எந்த உள்நோக்கத்துடனும் நாங்கள் 144 தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை என்று திருப்பரங்குன்றம் மலை தீபத்தூண் வழக்கு தொடர்பாக காணொலி காட்சி மூலம் ஆஜரான தலைமை செயலாளர் ஐகோர்ட் கிளையில் விளக்கமளித்தார்.

திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் கடந்த 1-ந் தேதி உத்தரவிட்டார். அந்த உத்தரவு அமல்படுத்தப்பட வில்லை என்பதால் அதிகாரிகள் மீது அதே நீதிபதி, கோர்ட்டு அவமதிப்பு வழக்கு தொடர்பாக விசாரித்து வருகிறார்.

இந்த வழக்கில் டிசம்பர் 17-ம் தேதி (அதாவது நேற்று) தமிழக தலைமைச் செயலாளர், போலீஸ் டி.ஜி.பி. ஆகியோர் வீடியோ கான்பரன்சிங் (காணொலி) மூலம் மதுரை ஐகோர்ட்டில் ஆஜராக வேண்டும் என நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டு இருந்தார். அதன்படி, இந்த வழக்கின் விசாரணை நேற்று பிற்பகலில் வந்தது. அப்போது தலைமை செயலாளர் உள்ளிட்டோர் காணொலி வாயிலாக ஆஜரானர்.

தலைமை செயலாளர் கூறுகையில், எந்த உள்நோக்கத்துடனும் நாங்கள் 144 தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஏற்கனவே உள்ள உத்தரவுகளின் அடிப்படையில்தான் பிறப்பித்தோம். தனி நீதிபதியின் உத்தரவை நிறைவேற்றக்கூடாது என்பதில் எந்த கருத்தும் இல்லை என்று கூறினார். அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "நீதிமன்றம் ஒரு உத்தரவை பிறப்பித்தால் அதை சட்ட ஒழுங்கு காரணம் காட்டி நிறைவேற்றாமல் இருப்பது என்ன விதமான செயல்" என்று கேள்வி எழுப்பினார்.

மேலும், நான் தேர்தலில் போட்டியிடபோவதாக தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் விகாஷ் சிங் வாதம் செய்தது ஏன்? - என்றும் கேள்வி எழுப்பினார். இதையடுத்து, இந்த வழக்கின் விசாரணை வரும் ஜனவரி 9 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த வழக்கில், மதுரை ஆட்சியர், காவல் ஆணையர் ஆகியோர் நேரில் ஆஜராகியிருந்தனர்.

## வரி விதிப்பு விவகாரத்தில்

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நடவடிக்கை

## மத்திய நிதி அமைச்சர் தகவல்

**டெல்லி, டிச. 18-**

வரி விதிப்பு விவகாரத்தை கவனமாக கையாண்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் நிலையில், ரஷ்யாவிடம் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது அமெரிக்க அரசு கடுமையான வரி விதிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீத வரி விதித்து அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். இதனால், அமெரிக்காவில் இந்திய பொருட்களில் விலை கணிசமாக அதிகரித்துள்ளது.

இதனிடையே, இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இரு தரப்பும் பல்வேறு சுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இந்த பேச்சுவார்த்தையில் 50 சதவீத வரி குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும், வர்த்தக ஏற்றதாழ்வுகளை குறைப்பதாகவும் கூறி இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு மெக்சிகோவும் 50 சதவீதம் வரி விதித்துள்ளது.

இந்நிலையில், வரி விதிப்பு மூலம் உலக வர்த்தகம் ஆயுதமாக்கப்பட்டு வருவதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக டெல்லியில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற நிர்மலா சீதாராமன் கூறுகையில், வரி விதிப்பு மற்றும் பிற வழிகள் மூலம் உலக வர்த்தகம் ஆயுதமாக்கப்பட்டு வருகிறது. வரி விதிப்பு விவகாரத்தை கவனமாக கையாண்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஒட்டு மொத்தமாக நமது நாட்டின் பொருளாதார வலிமை நமக்கு கூடுதல் நன்மைகளை அளிக்கின்றன.

இந்தியா இதில் கவனமாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், கட்டணத்தை மட்டும் கவனித்துக் கொள்ளாமல், ஒட்டுமொத்தமாக நமது பொருளாதார வலிமையே நமக்கு கூடுதல் நன்மையைத் தரும் என்று நான் நினைக்கிறேன்.

வரி விதிப்பின் மன்னன் இந்தியா என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், வரி விதிப்பு ஆயுதமாக்கப்பட்டு வருகிறது என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## சொந்த ஊரில் இருப்பது போல் உணர்கிறேன்:
# எத்தியோப்பியா பார்லி.,யில் பிரதமர் நரேந்திரமோடி உரை



**அட்டிஸ் அபபா, டிச. 18-**

எத்தியோப்பியாவுக்கு சென்றுள்ள பிரதமர் மோடி நேற்று அந்நாட்டு பாராளு மன்ற கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது சொந்த ஊரில் இருப்பது போல் உணர்கிறேன் என்று அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அப்போது அவர் பேசிய தாவது:- சிங்கங்களின் பூமி யான எத்தியோப்பியாவில் இருப்பது அற்புதமாக இருக் கிறது. நான் இங்கு என் சொந்த ஊரில் இருப்பது போல் உணர்கிறேன். ஏனென்றால் இந்தியாவில் உள்ள எனது சொந்த மாநில மான குஜராத்தும் சிங்கங்க ளின் இருப்பிடமாக உள்ளது.

இந்தியாவின் தேசியப் பாடலான வந்தே மாதரம் மற்றும் எத்தியோப்பியா வின் தேசிய கீதம் ஆகிய இரண்டுமே நமது தேசத்தை அன்னை என்று குறிப்பிடு கின்றன. அவை நமது பாரம் பரியம், கலாச்சாரம், அழகு ஆகியவற்றில் பெருமை கொள்ளவும், தாய்நாட்டைப் பாதுகாக்கவும் நம்மை தூண் டுகின்றன. எத்தியோப்பியா ஆப்பிரிக்காவின் ஒரு முக் கிய சந்திப்பில் அமைந்துள் ளது. இந்தியா இந்தியப் பெருங்கடலின் மையத்தில் உள்ளது. இரு நாடுகளும் பிராந்திய அமைதி, பாது காப்பு மற்றும் இணைப்பு ஆகியவற்றில் இயல்பான கூட்டாளிகள்.

இந்தியாவும் எத்தியோப் பியாவும் தட்பவெப்ப நிலை யிலும் உணர்விலும் ஒரு மித்த அன்பைப் பகிர்ந்து கொள்கின்றன. சுமார் 2 ஆயி ரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது மூதாதையர்கள் பரந்த கடல்களுக்கு அப்பால் தொடர்புகளை உருவாக்கி னார்கள். 1941-ம் ஆண்டில் எத்தியோப்பியாவின் விடுத லைக்காக இந்திய வீரர்கள் எத்தியோப்பியர்களுடன் இணைந்து போரிட்டனர். இந்திய நிறுவனங்கள் எத்தி யோப்பியாவில் மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டாளர் களில் ஒன்றாக உள்ளது. வள ரும் நாடுகளாக இந்தியாவும் எத்தியோப்பியாவும் ஒரு வருக்கொருவர் கற்றுக் கொள்ளவும், வழங்கவும் நிறைய உள்ளன.

உலகளாவிய தெற்குப் பகுதி யாருக்கும் எதிராக அல்லாமல், அனைவருக்கும் நன்மை பயக்கும் வகையில் எழுச்சி பெறும் ஒரு உலகமா கும். பயங்கரவாதத்தை எதிர்க்கும் எத்தியோப்பியா நாட்டிற்கு நன்றி. இவ்வாறு அவர் பேசினார்.

# மூன்று அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் விரைவில் ராணுவத்தில் இணைப்பு

**லக்னோ, டிச. 18-**

இந்தியா வந்த 3 அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் விரைவில் ராணுவத்தில் இணைக்கப்படும் என்று தகவல்.

இந்திய ராணுவ விமானப்படைப்பிரிவிற்கு 600 பில்லி யன் டாலர்கள் மதிப்பில் 6 அப்பாச்சி தாக்குதல் ஹெலிகாப் டர்களை அமெரிக்காவில் இருந்து வாங்க கடந்த 2020ம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்தப்படி 2 தவணைகளாக ஹெலிகாப்டர்கள் இந்தியாவிடம் ஒப்படைக் கப்பட வேண்டும்.

முதல் தவணையாக 3 அப்பாச்சி ரக தாக்குதல் ஹெலிகாப் டர்கள் 2024 ஜூலை மாதம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டி ருந்தது. ஆனால், பல்வேறு காரணங்களுக்காக இந்த ஹெலி காப்டர்களை இந்தியாவிடம் ஒப்படைப்பதில் தாமதம் நிலவி வந்தது. இதனை தொடர்ந்து கடந்த ஜூலை 22ம் தேதி முதல் தவணையாக 3 அப்பாச்சி தாக்குதல் ரக ஹெலிகாப்டர்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிலையில், 2வது தவணையாக எஞ்சிய 3 அப்பாச்சி தாக்குதல் ரக ஹெலிகாப் டர்கள் நேற்று முன்தினம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளன. அமெரிக்காவில் இருந்து சரக்கு விமானம் மூலம் 3 அப்பாச்சி ஹெலிகாப்டர்களும் உத்தரபிரதேசத்தின் ஹிண் டன் விமானப்படைத்தளத்திற்கு கொண்டு வரப்பட்டன.

இந்த ஹெலிகாப்டர்கள் சோதனைக்குப்பின் பாகிஸ்தான் எல்லையில் ராஜஸ்தானின் ஜோத்பூர் படைத்தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விரைவில் ராணுவத்துடன் இணைக் கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஜூலை மாதம் ஒப்படைக்கப்பட்ட 3 அப்பாச்சி ஹெலிகாப்டர்களும் ஜோத்பூர் படைத்தளத்தில் ராணுவத்தில் இணைக்கப்பட்டுள் ளது என்பது குறிப்பிடத்தக்கது.



**முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச்செயலகத்தில், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார்.**

## 100 நாள் வேலை திட்ட விவகாரம்:
# இ.பி.எஸ்.க்கு முதல்வர் ஸ்டாலின் கேள்வி

**சென்னை, டிச. 18-**

100 நாள் வேலை திட்ட விவகாரத்தில் இ.பி.எஸ்.க்கு முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக முதல்வர்மு.க.ஸ் டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித் திருப்பதாவது:-

பச்சைத்துண்டு போட் டுக்கொண்டு பச்சைத் துரோ கம் செய்பவருக்கு, மீண்டும் விவசாயிகள் கண்ணில் தெரி யவில்லையா? கிராமப்புற ஏழை மக்களின் வயிற்றி லேயே அடிப்பது குறித்து எதிர்க்கட்சி அ.தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன? மூன்று விவசாய சட்டங்கள், சி.ஏ.ஏ. போல இதிலும் அமித்ஷா வுக்கு ஆமாம் சாமி போட்டு ஆதரவு தரப்போகிறாரா பழ னிசாமி?

காந்தியடிகளின் பெயரை அகற்றிவிட்டு, சொன்னால் வாய் சுளுக்கிக் கொள்ளும் படி இந்தியில் பெயரிட்டி ருக்கிறார்கள். இந்தித் திணிப்பை எதிர்த்து வென்ற பேரறிஞர் அண்ணாவின் பெயரைக் கட்சியின் பெய ரில் வைத்துக்கொண்டு, இதை எதிர்க்கக் கூடவா தயக்கம்? திட்டத்துக்கான நிபந்தனைகள் எல்லாம் மத் திய அரசின் கட்டுப்பாட் டில்! நிதிக்கு மட்டும் மாநில அரசு பங்களிக்க வேண்டும் என்பதை அ.தி.மு.க. எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள் கிறதா? உங்கள் தலைவி அம் மையார் ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டிருப் பாரா?

வறுமையை ஒழித்த சாத னைக்குத் தண்டனையாக தமிழ்நாட்டில் நூறு நாள் வேலைத்திட்டமே நின்று போகும் ஆபத்தை எதிர் நோக்கி உள்ளோம். இதற்கு, எப்படி முட்டு கொடுக்கப் போகிறார் எதிர்க்கட்சித் தலைவர்? இவ்வளவு குனிந்து கும்பிடும் போடும் உங்களது கட்சிக்கு, "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயர் எதற்கு? நான் கேட்க வில்லை தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 45 ஆயிரம் வாக்காளர் நீக்கம்:
# மம்தா தொகுதியில் வீடு வீடாக ஆய்வு செய்ய தி.காங்., திட்டம்

**கொல்கத்தா, டிச. 18-**

45 ஆயிரம் வாக்காளர் நீக்கம்ப்பட்டதை அடுத்து மம்தா பானர்ஜி தொகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் வீடு வீடாக சென்று ஆய்வு நடத்த திட்டமிட்டுள்ளனர்.

மேற்கு வங்காளம், ராஜஸ்தான், கோவா மற்றும் புதுச்சே ரி, லட்சத்தீவு ஆகிய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக் கான வரைவு வாக்காளர் பட்டியல் நேற்று முன்தினம் வெளி யானது. இந்த 5 மாநிலங்களில் 1 கோடிக்கும் மேற்பட்ட வாக் காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப் பட்டுள்ளன.

மேற்கு வங்காளத்தில் 58 லட்சத்திற்கு மேற்பட்டவர்களும், ராஜஸ்தானில் 44 லட்சம் பேரும், கோவாவில் 1.01 லட்சம் பேரும், புதுச்சேரியில் 1 லட்சத்திற்கு மேற்பட்டோரும் வாக் காளர் பட்டியலில் இடம் பெறவில்லை. மேற்கு வங்காளத் தில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை முன்பு 7.66 கோடி யாக இருந்தது. தற்போது 7.08 கோடியாக குறைந்துள்ளது.

அங்கு 58 லட்சத்திற்கும் மேல் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதால், ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி அதிர்ச்சி அடைந்துள்ளது. இது சில முக்கிய தொகுதிக ளில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, முதல்-மந்திரி மம்தா பானர்ஜியின் தொகுதி யான பவானிபூரில் 47,787 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரி மாதம் அந்த தொகுதியில் 2,06,295 வாக்காளர் கள் இருந்தனர். தற்போது வரைவு பட்டியலில் 1,61,509 வாக் காளர் பெயர்கள் மட்டுமே உள்ளன. 21.7 சதவீத வாக்காளர்கள் அங்கு நீக்கப்பட்டுள்ளனர்.அந்த தொகுதியில் கொல்கத்தா மாநகராட்சியின் 8 வார்டுகள் இடம் பெற்றுள்ளன. இதில் 3 வார்டுகளில் அதிக எண்ணிக்கையிலான பெயர்கள் நீக்கப்பட் டுள்ளன.

மம்தா பானர்ஜி தொகுதியில் 45 ஆயிரம் வாக்காளர்கள் நீக் கப்பட்டுள்ளதால், நீக்கப்பட்ட வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று ஆய்வு செய்ய திரிணாமுல் காங்கிரஸ் திட்டமிட்டுள் ளது. வாக்குச்சாவடி முகவர்கள் அந்த இடங்களுக்கு சென்று பெயர்களை சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அந்த கட்சி உத்தரவிட்டுள்ளது.

## கனிமொழி எம்.பி தலைமையில்
# தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு அமைப்பு

**சென்னை, டிச. 18-**

தூத்துக்குடி எம்.பி. கனி மொழி தலைமையில் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டமன்ற தேர் தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறுகிறது. தேர்தலில் மக்களின் வாக்கு களை கவர, அரசியல் கட்சி கள் கவர்ச்சிகர வாக்குறுதி களை அளிப்பது வழக்கம். கடந்த ஆண்டு தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் மகளி ருக்கு பேருந்துகளில் இலவச பஸ் பயணம், குடும்ப தலை விகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை உள்ளிட்ட வாக்குறுதிகளை



அளித்தது.

அதேபோல, ஒவ்வொரு கட்சிகளும் ஆட்சிக்கு வந் தால் என்ன செய்ய இருக்கி றோம் என்பதை குறிப்பிட்டு தேர்தல் அறிக்கை வெளியிடு வது வழக்கம். அந்த வகை யில் அடுத்த ஆண்டு சட்ட சபை தேர்தலுக்கான அறிக் கையை தயாரிக்க குழு அமைத்து தி.மு.க. தலைமை அறிவிப்பு வெளியிட்டுள் ளது. இந்தக் குழுவிற்கு கனி மொழி தலைமை தாங்குகி றார். குழுவில் இடம் பெற் றுள்ளவர்கள் விவரம் வரு மாறு: டிகேஎஸ் இளங்கோ வன், பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், டிஆர்பி ரஜா, எம்.எம். அப்துல்லா, கான்ஸ் டைன் ரவீந்திரன், கார்த்தி கேய சிவசேனாபதி, தமிழரசி ரவிக்குமார், ஜி சந்தானம், சுரேஷ் சம்பந்தம்" ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

# ஈரோட்டில் இன்று விஜய் பிரச்சாரம்

**ஈரோடு, டிச. 18-**

ஈரோடு அடுத்த விஜய மங்கலம் சரளை பகுதியில் த.வெ.க. தலைவர் விஜய் வாகன பிரச்சார பொதுக்கூட் டம் இன்று நடப்பதை யொட்டி 1500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

பேனர்கள் வைப்பதற்கு மாநகராட்சி 17 நிபந்தனை கள் விதித்துள்ளது. புஸ்சி ஆனந்துக்கு மாலை அணி விப்பதில் த.வெ.க. நிர்வாகி கள் இடையே ஏற்பட்ட மோதல் பரபரப்பை ஏற்ப டுத்தியுள்ளது. ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே விஜயமங்கலம் சரளை பகுதியில் த.வெ.க. தலைவர் விஜய் வாகன பிரச் சார பொதுக்கூட்டம் இன்று (18ம் தேதி) நடக்கிறது. கூட் டத்தில் விஜய் பேசுவதற்கு காலை 11 மணி முதல் மதி யம் 1 மணி வரை போலீசா ரால் நேரம் அனுமதிக்கப்பட் டுள்ளது.

த.வெ.க. தொண்டர்கள், பொதுமக்கள் மத்தியில் விஜய் பேச உள்ளார். இதற்



கான ஏற்பாடுகளை த.வெ.க. நிர்வாகிகள் செய்து வருகின் றனர். இந்த பணியில் த. வெ.க. மாநில நிர்வாகக்குழு தலைமை ஒருங்கிணைப்பா ளர் கே.ஏ.செங்கோட்டையன் தலைமையில் மாவட்ட, ஒன் றிய நிர்வாகிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுக்கூட்டத்தில் கட் சியினர் சுமார் 10 ஆயிரம் பேரும், பொதுமக்கள் சுமார் 25 ஆயிரம் பேரும் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. அதன் அடிப்படையில் 15 ஏக்கர் பரப்பளவில் மைதானம் தயார் செய்யப்பட்டுள்ளது. விஜய் பிரச்சார வாகனத்தின் மீது நின்று பேச உள்ளார். வாகனம் நிறுத்தப்படும் பகு தியை பொதுமக்கள் பார்க் கும் வகையில் மைதானம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அனைத்து பகுதிகளிலும் இரும்பு கம்பிகளால் ஆன தடுப்பு வேலிகள் பொருத் தப்பட்டுள்ளது.

தடுப்பு வேலி பகுதியில் சுமார் 400 முதல் 500 பேர் வரை நிற்கும் வகையில் இட வசதி ஏற்படுத்தப்பட்டுள் ளது. பொதுமக்கள் பாதுகாப் புக்காக 40 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட் டுள்ளன. வாகனங்கள் நிறுத்த 80 ஏக்கர் பரப்பள வில் இடம் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணிக்காக பெருந்துறை, ஈரோடு, சென்னிமலை நிலையங்களில் இருந்து மொத்தம் 4 தீயணைப்பு வாகனங்கள் நிறுத்தி வைக் கப்பட்டுள்ளன. மாவட்ட எஸ்பி சுஜாதா தலைமையில் 1500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

# குஜராத்: விபத்தில் 3 பலி

**காந்தி நகர், டிச. 18-**

குஜராத் மாநிலம் அம்ரேலி மாவட்டம் பகுசாரா பகுதி யில் இன்று அதிகாலை கார் சென்றுகொண்டிருந்தது. அந்த காரில் 4 பேர் பயணித்தனர். பகுசாரா பகுதியில் உள்ள சாலை யில் சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார், சாலையோர மரத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் 3 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். எஞ்சிய ஒருவர் படுகாயமடைந்தார்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், மீட்புக்குழுவி னர் படுகாயமடைந்த நபரை மீட்டு அருகில் உள்ள மருத்து வமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**வாக்களிப்பது நமது கடமை**

## தமிழக தேர்தல் பொறுப்பாளர்
# பியூஷ் கோயல் டிச. 23-ல் தமிழகம் வருகை: நயினார்

**சென்னை, டிச. 18-**

தமிழக தேர்தல் பொறுப் பாளராக நியமிக்கப்பட் டுள்ள மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் வரும் 23-ம் தேதி தமிழகம் வருகிறார் என்று நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

தமிழகம், புதுச்சேரி, அசாம், மேற்கு வங்காளம் மற்றும் கேரளா ஆகிய 5 மாநிலங்களுக்கு இன்னும் சில மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு பா.ஜ.க. ஆயத்த வேலைகளை செய்து வருகி றது. தேர்தல் நடைபெறும் மாநிலங்களின் பா.ஜ.க. தலைவர்களுடன் அடிக்கடி ஆலோசனைகள் நடத்தப்படு கின்றன. இந்த வகையில் தமிழக பா.ஜ.க. தலைவர் நயி னார் நாகேந்திரன் டெல்லி யில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந் தித்து பேசினார். இதில் தேர் தல் யுக்திகள் தொடர்பாக பேசப்பட்டது. இதனைதொ டர்ந்து தமிழகத்துக்கு தேர் தல் பொறுப்பாளர்கள் கடந்த 3 தினங்களுக்கு முன்பு நிய மிக்கப்பட்டனர்.

தமிழக தேர்தல் பொறுப் பாளராக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டு உள்ளார். இணை பொறுப்பாளர்களாக சட்டம் மற்றும் நாடாளு மன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மெக்வால், சிவில் விமான போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் முர ளிதர் மொகல் ஆகியோர் நிய மிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப் பட்டுள்ள மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் வருகிற 23-ம் தேதி தமிழகம் வர உள்ள தாக பா.ஜ.க. மாநில தலை வர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார். பா.ஜ.க. உயர் மட்ட குழு ஆலோசனைக் கூட்டத்திற்கு பிறகு செய்தி யாளர்களைச் சந்தித்த நயி னார் நாகேந்திரன் கூறியதா வது:-

எனது பரப்புரைப் பய ணம் ஜனவரி 9-ம்தேதி நிறைவு பெறுகிறது. பரப் புரை நிறைவுக் கூட்டத்திற்கு பிரதமர் மோடி அல்லது மத் திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வருகை தருவார் கள். நாளையே தேர்தல் வந் தாலும் எதிர்கொள்ள தயார். மக்கள் யார் பக்கம் இருக்கி றார்கள் என்பதே முக்கியம். 5 ஆண்டு கால ஆட்சியில் தி.மு.க. சொத்து வரியை உயர்த்தியிருக்கிறார்கள். மின் கட்டணத்தை உயர்த்தியிருக் கிறார்கள். பாலியல் பலாத்கா ரங்கள் அதிகரித்திருக்கின் றன. 7 ஆயிரத்துக்கு மேற் பட்ட கொலைகள் நடந்தி ருக்கின்றன. பெண்கள் சாலையில் நடமாட முடிய வில்லை. போதைப்பொருட் கள் புழக்கம் அதிகரித்திருக் கிறது. தமிழக பா.ஜ.க. தேர் தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் வருகிற 23-ந்தேதி தமிழ்நாடு வர இருக்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

## இனி அன்புமணி ராமதாஸ் அல்ல....
# அன்புமணி மட்டுமே: ராமதாஸ்

**விழுப்புரம், டிச. 18-**

இனி அன்புமணி ராம தாஸ் அல்ல அன்புமணி மட் டுமே என்று ராமதாஸ் தெரி வித்துள்ளார்.

சட்டமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில், பா.ம.க.வின் நிர்வாகக்குழு கூட்டம் விழுப்புரம் தைலா புரம் தோட்டத்தில் ராமதாஸ் தலைமையில் நேற்று நடை பெற்றது. இதில் அன்பும ணிக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக பா.ம.க. நிறுவ னர் ராமதாஸ் செய்தியாளர்க ளிடம் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:-

அவரை கட்சியில் இருந்து நீக்கி விட்டேன். அப்போது என் பெயரையும் கட்சியின் பெயரையும் பயன் படுத்தக்கூடாது என தெரி வித்திருதேன். இருப்பினும் எனது பெயரையும் கட்சி யின் பெயரையும் பயன்ப டுத்தி இருக்கிறார்கள் இதனை வன்மையாக கண் டிக்கிறேன். இப்போது அன் புமணிக்கு சின்னமும் இல்லை கட்சியும் இல்லை என நாங்கள் வழக்கு தொடுத் தோம். அன்புமணி கட்சி உறுப்பினர் கூட இல்லை. அவரை நாங்கள் நீக்கி விட் டோம். கட்சியைக் கைப் பற்ற பம்மாத்து வேலை களை எல்லாம் அன்புமணி தொடர்ந்து செய்து வருகி றார். தீட்டிய மரத்திலேயே கூர் பாய்ச்சியதைப் போல் பா.ம.க. என்னும் மரத்தில் கிளையை வெட்ட ஆரம்பித் திருக்கிறார் அன்புமணி.

நாம் நட்ட ஒரு பூந்தோட் டம். அதில் பல குரங்குகள் நுழைந்து பூக்களை எல்லாம் தினமும் நாசம் செய்து கொண்டிருக்கின்றன. தேர் தல் ஆணையம், டெல்லி அனைத்தும் சொல்லியும் கூட கூட்டம் நடத்துவது, இது போன்ற பம்மாத்து வேலைகளை எல்லாம் செய்து வருவது தமிழக அர சியலில் இதுவரை நடைபெ றாத ஒரு கொடுமை. இதற்கு முன்னர் இப்படி எல்லம் நடந்ததில்லை. அன்புமணி என் பெயரை சொல்லி என் பணத்தை போட்டு என் கொடியை பயன்படுத்தி செய்வது வேதனை அளிக்கி றது. இதனை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்த நிர்வாகக்குழுவில் கண் டிக்கப்பட்டது. ஆயிரக்கணக் கான பொய் மூட்டைகளை ஊடகங்களுக்கு அன்புமணி கொடுக்கிறார். அது எனக்கு வருத்தம் அளிக்கிறது. இவ் வாறு அவர் கூறினார்.

# ஈரோட்டில் இன்று த.வெ.க. பிரச்சாரம் நடைபெறும் இடத்தில் எஸ்.பி. ஆய்வு

**ஈரோடு, டிச. 18-**

விஜய் பிரச்சார கூட்டத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட் டோர்கள் கூடுவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படும் நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நேற்று நேரில் ஆய்வு நடத்தினார்.



த.வெ.க. தலை வர் விஜய் மாவட் டம் தோறும் மக் கள் சந்திப்பு என் கிற பெயரில் பொதுக்கூட்டங் கள் நடத்தி பொது மக்கள் மத்தியில் பேசி வருகிறார். அதன்படி இன்று (வியாழக்கிழமை) ஈரோடு மாவட்டம் விஜயமங்கலம் சர ளையில் உள்ள சுங்கச்சாவடி அருகே த.வெ.க. சார்பில் மக்கள் சந்திப்பு பொதுக்கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் விஜய் கலந்து கொண்டு பேசுகிறார். கூட்டம் நடைபெறும் இடம் விஜயபுரி அம்மன் கோவிலுக்கு சொந்தமான இடமாகும். அங்கு 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

விஜய் மக்கள் சந்திப்பு இன்று நடைபெறவுள்ள நிலை யில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா நேற்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். பிரச்சாரம் நடைபெறும் இடத்தில் ஆம்புலன்ஸ் வாகனங்கள், தீயணைப்பு வாகனங் கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான முன்னேற்பாடு கள் செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா நேற்று ஆய்வு நடத்தினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



மாநிலங்களின் நலன்களையும், விவசா யப் பெருங்குடி மக்கள் உள்ளிட்ட ஏழையெ ளிய கிராமப்புற மக்களின் நலன்களையும் பாதிக்கும் விக்சித் பாரத் ஊரக வாழ்வாதா ரம் மற்றும் வேலை வாய்ப்பு உறுதிச் சட்ட முன்வடிவை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். அல்லது பார்லி., கூட்டுக் குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

**- ஓ.பன்னீர்செல்வம்**



மசோதாக்களின் பெயர்களை இந்தி யில் வைப்பது இந்தி பேசாத மக்களை அவமரியாதை செய்வதாகும். மசோதா வின் தலைப்பை ஆங்கில பதிப்பில் ஆங் கில வார்த்தைகளிலும், இந்தி பதிப்பில் இந்தி வார்த்தைகளிலும் எழுதுவதே நடை முறை. 75 ஆண்டுகால இந்த நடைமுறை யில் யாரும் குறுக்கிடாத போது, ஏன் ஒரு மாற்றத்தை மேற்கொள்ள வேண்டும்?.

**- ப.சிதம்பரம்**



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் நோக்கத்தை சிதைத்து, கோடிக்கணக்கான ஏழை மக்களில் வயிற்றில் அடிக்கும் வகையில் திட்டத்தையே நீர்த்துப் போக செய்ய முயற்சிப்பது மன்னிக்க முடியாத துரோகச் செயலாகும். மோடி அரசின் மக் கள் விரோத செயல்பாடுகளுக்கு தேர்த லில் மக்கள் உரிய பாடம் கற்பிப்பார்கள்.

**- வைகோ**



இன்று, நீதிமன்றம் மோடி அரசாங்கத் தின் நடவடிக்கைகளை சட்டவிரோதமா னது என்று அறிவித்து, அரசியல் பழிவாங் கும் சதியை முறியடித்துள்ளது. வாக்குக ளைத் திருடும் அரசாங்கம்" ஜனநாய கத்தை நசுக்க எவ்வளவு பலத்தைப் பயன் படுத்தினாலும், 140 கோடி இந்தியர்களுக் காகவும், இந்த அரசியலமைப்பைக் காப் பாற்றவும் எங்கள் போராட்டம் தொடரும்.

**- கார்கே**

# திருவொற்றியூர் மண்டல கவுன்சிலர்கள் கூட்டம்



**திருவொற்றியூர். டிச. 18**

பெருநகர சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் வார்டு குழுவின் 40வது சாதாரண கூட்டம், மாமன்ற உறுப்பினர்கள் அரங்கத்தில் மண்டல குழு தலைவர், தி.மு.தனியரச தலைமையில் , மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் மண்டல அலுவலர் பத்மநாபன், உதவி செயற் பொறியாளர் பாண்டியன், பாபு, மண்டல வருவாய் த்துறை அலுவலர் அர்ஜுனன் ஆகியோரின் முன்னிலையில் நடைப்பெறறது.இதில் மாமன்ற உறுப்பினர்கள் நிர்வாக பொறியாளர்கள் உதவி பொறியாளர்கள் சுகாதாரத்துறை அதிகாரிகள், மின்சாரத்துறை அதிகாரிகள், வட்டாட்சியர், மெட்ரோ வாட்டார் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், போக்குவரத்துறை அதிகாரிகள், தீயணைப்பு துறை, கிராம நிர்வாக அதிகாரிகள், கூட்டத்தில் கலந்து கொண்டனர், இக்கூட்டத்தில் ஒருமனதாக 80 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



**வளசரவாக்கம் மண்டல அலுவலகத்தில் வார்டு குழு கூட்டம் மண்டல தலைவர் நொளம்பூர் வே.ராஜன் தலைமையில் நடைபெற்றது.இதில் மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வார்டிலுள்ள குறைகளை சுட்டிகாட்டி பேசினர்.**



**சென்னையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நல பணிகள் இயக்ககத்தில் அனைத்து மாவட்ட இணை இயக்குனர்கள் ஆய்வு கூட்டம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடந்தது. இதில் அரசு முதன்மை செயலாளர் செந்தில்குமார், மருத்துவ பணியாளர் தேர்வாணைய தலைவர் உமாமகேஸ்வரி, தேசிய நலவாழ்வு குழும இயக்குனர் அருண்தம்புராஜ், ஊரக நல பணிகள் இயக்குனர் சித்ரா கலந்து கொண்டனர்.**



**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்திற்கு உட்பட்ட திருப்புலிவனம் கிராமத்தில் மகளிர் மூலம் 'நெகிழி' ( பிளாஸ்டிக் ) அரைக்கும் கூடத்தை, மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இங்கு காற்று மூலம் மாசு ஏற்படுமா உள்ளிட்ட விபரங்களையும் பணியாளர்களிடம் கேட்டறிந்தார்.**




**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு விருகம்பாக்கம் தெற்கு பகுதி 137வது வட்டத்தில் மாவட்ட பிரதிநிதி பா.தினேஷ்குமார் தலைமையில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை மாநகராட்சி கணக்குகுழு தலைவர் க.தனசேகரன் பொது மக்களுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம், வடக்கு பகுதி செயலாளர் மு.ராசா எம்.சி, பொதுக்குழு உறப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன் மற்றும் பலர் உள்ளனர்.**

# சென்னை துரைப்பாக்கம் பகுதியில் செருப்பு கடை உரிமையாளரை தாக்கி, பணத்தை பறித்த இருவர் கைது

**சென்னை டிச 18-**

சென்னை, பாலவாக்கம், காந்திநகர் பகுதியில் வசித்து வரும் ஜாபர்அலி, என்பவர் கடந்த 5 வருடங்களாக கந்தன் சாவடி, கருணாநிதி சோழன் நகர், வீரமணி சாலையில் செருப்பு கடை வைத்து நடத்தி வருகிறார். இவர் கடந்த 13. ந் தேதி அன்று இரவு, மேற்படி கடையில் இருந்தபோது, அங்கு வந்த மூவர் செருப்பு வாங்குவதுபோல கடைக்குள் நுழைந்து, ரூ.350 மதிப்புள்ள செருப்பை ரூ.100 க்கு கேட்டுள்ளனர். ஜாபர்அலி ரூ.100 க்கு தர முடியாது என்று கூறிய போது, அவரை தகாத வார்த்தைகள் பேசி, கைகளால் தாக்கி, கத்தியைக் காட்டி மிரட்டி, கல்லாவில் வைத்திருந்த பணம் ரூ.850 ஐ பறித்துக் கொண்டு, கொலை மிரட்டல் விடுத்து, மூவரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர். இது குறித்து ஜாபர்அலி துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.தமிழ்செல்வன், 2.சதிஷ்குமார், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் பணத்தில் செலவு செய்தது போக பணம் ரூ.200 ஐ மீட்கப்பட்டு, குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

மேற்படி குற்ற சம்பவத்தில் தொடர்புடைய மற்றொரு தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

**கண், ரத்த தானம் செய்வீர்**

# சென்னை, முத்தையால்பேட்டை, அருள்மிகு மல்லிகேசுவரர் திருக்கோயிலில் திருவெம்பாவை கூட்டு வழிபாடு: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்



சென்னை,டிச.18

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.பி.கே.சேகர்பாபு மார்கழித் திருவிழாவை முன்னிட்டு (16.12.2025) சென்னை, முத்தையால்பேட்டை, அருள்மிகு மரகதாம்பாள் உடனுறை மல்லிகேசுவரர் திருக்கோயிலில் திருவெம்பாவை கூட்டு வழிபாட்டை தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பில் சித்தர்கள் மற்றும் அருளாளர்களுக்கு விழாக்கள் நடத்தி சிறப்பு செய்வதோடு, இறையன்பர்கள் பங்கேற்புடன் மகாசிவராத்திரி பெருவிழா, நவராத்திரி விழா, ஐயப்பன் மலர் வழிபாடு, முருகன் திருக்கோயில்களில் கந்த சஷ்டி பாராயணம், வைணவத் திருக்கோயில்களில் திருப்பாவை பாராயணம் போன்ற சிறப்பு வழிபாடுகளும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

மாதங்களில் சிறந்த மாதமென கூறப்படும் மார்கழி மாதம் இறைவழிபாட்டிற்கு மிகவும் உகந்ததாக போற்றப்படுகிறது. இம்மாதத்தில் வைணவத் திருக்கோயில்களில் 12 ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவை பாசுரங்களும், சிவன் திருக்கோயில்களில் சைவக் குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசகரால் இயற்றப்பட்ட திருவெம்பாவை பாசுரங்களும் இறையன்பர்களால் தொடர்ந்து பாராயணம் செய்யப்பட்டு வருகிறது.

அந்த வகையில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.பி.கே.சேகர்பாபு அவர்கள் மார்கழித் திருவிழாவை முன்னிட்டு சென்னை, முத்தையால்பேட்டை, அருள்மிகு மரகதாம்பாள் உடனுறை மல்லிகேசுவரர் திருக்கோயிலில் இன்று திருவெம்பாவை கூட்டு வழிபாட்டை தொடங்கி வைத்தார். இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு. சுகி சிவம் அவர்கள் திருவெம்பாவையின் சிறப்பு குறித்து விளக்கிக் கூறினார். அதனைத் தொடர்ந்து திருக்கோயில் ஓதுவார்கள் மற்றும் இறையன்பர்கள் திருவெம்பாவை பாராயணம் செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், சிறப்பு பணி அலுவலர் ச.லட்சுமணன், மண்டல இணை ஆணையர்கள் ஜ. முல்லை, கி. ரேணுகா தேவி, திரு சு. மோகனசுந்தரம், உதவி ஆணையர்கள். க. சிவகுமார், கி. பாரதிராஜா, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வெங்கட கோபாலகிருஷ்ணன் மற்றும் அறங்காவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கொடுங்கையூர் பகுதியில் அச்சக உரிமையாளர் வீட்டில் பணம் திருடிய இருவர் கைது

**சென்னை டிச 18-**

சென்னை, கொடுங்கையூர், சீனிவாசன் பெருமாள் கோயில் தெருவில் வசித்து வரும் அசோக்குமார், என்பவர் மண்ணடி பகுதியில் பிரிண்டிங் பிரஸ் நடத்தி வருகிறார். இவர் கடந்த 25.ந் தேதி அன்று வீட்டில் மருத்துவ செலவிற்காக சேர்த்து வைத்திருந்த பணத்தை சரிபார்த்த போது, பணம் ரூ.11,06,500 ஐ காணாமல் போனது தெரியவந்தது. இது குறித்து அசோக்குமார் கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளுடன் மேற்படி குற்ற சம்பவத்தில் தொடர்புடைய 1.அப்பாஸ், 2.முகமது ரியாஸ், ஆகிய இருவரை நேற்று முன் தினம் கைது செய்தனர்.விசாரணையில் புகார்தாரர் அசோக்குமாரின் மகன் வினோத் என்பவரிடம் அப்பாஸ் ஓட்டுநராக வேலை செய்து வந்துள்ளார். அசோக்குமாரிடம் பணப்புழக்கம் அதிகம் இருப்பதை தெரிந்து கொண்ட அப்பாஸ் அவரிடமிருந்து பணத்தை திருட திட்டமிட்டு, கடந்த 22 ந் தேதி அன்று அசோக்குமார் பிரிண்டிங் பிரஸ்ஸிலிருந்த போது, அங்கு சென்ற அப்பாஸ் மற்றும் செல்போன் கடையில் வேலை செய்து வரும் அப்பாஸின் நண்பர் முகமது ரியாஸ் ஆகிய இருவரும் வண்டியில் பெட்ரோல் தீர்ந்துவிட்டது எனக்கூறி அசோக்குமாரிடம் இருசக்கர வாகனத்தை வாங்கிச்சென்று, இருசக்கர வாகன சாவி கொத்தில் இருந்த அசோக்குமாரின் வீட்டின் சாவியை எடுத்து டூப்ளிகேட் சாவி செய்து விட்டு உடனடியாக இருசக்கர வாகனத்தை அசோக்குமாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதன்பின்னர் திட்டமிட்டபடி அப்பாஸ் கடந்த 24.ந் தேதி அன்று முகமது ரியாஸ் என்வருடன் சேர்ந்து புகார்தாரர் அசோக்குமார் வீட்டிற்கு சென்று, அப்பாஸ் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு ஆட்களை கண்காணித்துள்ளார். முகமது ரியாஸ் டூப்ளிகேட் சாவியை பயன்படுத்தி அசோக்குமாரின் வீட்டை திறந்து அங்கிருந்த பணம் ரூ.11,06,500 ஐ திருடி விட்டு பின்னர் அங்கிருந்து இருவரும் தப்பிச்சென்றது தெரியவந்தது.

மேலும் போலீசாரின் விசாரணையில் எதிரிகள் திருடிய பணத்திலிருந்து 2 புதிய ஆப்பிள் ஐ போன்கள் வாங்கியுள்ளதும், மேலும் 3 லட்சத்தை அறிமுகமான நபரிடம் கொடுத்து கடன் பத்திரம் பெற்றுள்ளதும் தெரியவந்தது. அவர்களிடமிருந்து பணம் ரூ. 4.5 லட்சம், 3 லட்சம் மதிப்புள்ள கடன் பத்திரம், திருடிய பணத்தில் வாங்கிய 2 ஆப்பிள் ஐ-போன்கள் மீட்பு மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல் . விசாரணைக்குப்பின்னர், இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைத்தனர்

# சென்னை மடிப்பாக்கம் பகுதியில் உடற்பயிற்சி கூடத்தில் ரூ.48 லட்சம் மோசடி: பயிற்சியாளர் கைது

**சென்னை டிச 18-**

சென்னை, கோவிலம்பாக்கம், எஸ்.கொளத்தூர், 1வது மெயின் ரோட்டில் வசித்து வரும் நிஷாந்தி, என்பவர் அவரது தோழியுடன் சேர்ந்து அதே பகுதியில் உடற்பயிற்சி கூடம் நடத்தி வருகிறார். இந்த உடற்பயிற்சி கூடத்தில் கடந்த 2019ம் ஆண்டு முதல் பயிற்சியாளராக வேலை செய்த சிவக்குமார் என்பவர் உடற்பயிற்சி கூடத்தின் அனைத்து வரவு, செலவு பொறுப்புகளையும் கவனித்து வந்துள்ளார். நிஷாந்தி வாரத்திற்கு ஒரு முறை சென்று நிர்வாகத்தை கவனித்து வந்துள்ளார். நிஷாந்தி கடந்த மே மாதம் கணக்கு வழக்குகளை சரிபார்த்த போது, உடற்பயிற்சி கூடத்திற்கு வரும் கூட்டத்திற்கும், வரும் வருவாய்க்கும் வித்தியாசம் இருந்ததால் கணிணியில் கணக்கு வழக்குகளை சரிபார்த்ததில், சுமார் ரூ.48 லட்சம் மோசடி செய்திருப்பது தெரியவந்தது. இது குறித்து சிவக்குமாரிடம் கேட்ட போது அவர் வேலையிலிருந்து நின்றுள்ளார், மோசடி செய்த சிவக்குமார் மீது நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டு தருமாறு நிஷாந்தி மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மடிப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில் புகார்தாரர் குறிப்பிட்டிருந்தது உண்மையென தெரியவந்ததின்பேரில், மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி சிவக்குமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 337 கிராம் வெள்ளி நகைகள், 3 கிராம் தங்கச்செயின் மற்றம் 1 கார் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரி சிவக்குமார் உடற்பயிற்சி கூடத்திற்கு வரும் வாடிக்கையாளர்களிடம் சந்தா தொகையை சிவக்குமாரின் யுபிஐ கணக்கிலும், அவரது மனைவி யுபிஐ கணக்கிலும் பெற்று மோசடி செய்திருப்பது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சிவக்குமார் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# சென்னை புழல் பகுதியில் வடமாநில வாலிபரிடம் மணிபர்ஸை பறித்த வழக்கில் 5 திருநங்கைகள் கைது

**சென்னை டிச 18-**

மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பிரசாந்தா மண்டல், என்பவர் கடந்த 6 மாதங்களாக சென்னை, விளாங்காடுபாக்கத்தில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.

இவர் கடந்த 14.ந் தேதி அன்று இரவு, புழல், வடபெரும்பாக்கம் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது, அங்கு ஆட்டோவில் வந்த நான்கு திருநங்கைகள் மேற்படி பிரசாந்தா மண்டலை வழிமறித்து ஆசீர்வாதம் செய்து பணம் கேட்டுள்ளனர்.

பிரசாந்தாமண்டல், அவரது மணிபர்ஸில் இருந்து பணம் எடுக்க முற்பட்ட போது, பணம் ரூ.700 அடங்கிய மணிபர்ஸை நான்கு திருநங்கைகளும் சேர்ந்து பறித்துக் கொண்டு, அங்கு தயாராக நின்று கொண்டிருந்த ஆட்டோவில் ஏறி, ஆட்டோ ஓட்டுநர் உட்பட 5 திருநங்கைகளும் தப்பிச் சென்றனர். இது குறித்து பிரசாந்தாமண்டல், புழல் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

புழல் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.ஜெகன் (எ) ஜெயஶ்ரீ, 2.அப்பு (எ) அஷ்விகா, 3.பாலா (எ) கயல்விழி, 4.ரஞ்சன் (எ) ரஞ்சிதா, 5.கார்த்திக் (எ) முகமது இத்ரிஷ்ஆகிய 5 திருநங்கைகளை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் பணத்தில் செலவு செய்தது போக பணம் ரூ.400ஐ மீட்கப்பட்டு, குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி கார்த்திக் (எ) முகமது இத்ரிஷ் மீது ஏற்கனவே 1 குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட 5 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# வானகரம் பகுதியில் மதுபாட்டில்கள் விற்பனை: ஒருவர் கைது

**சென்னை டிச 18-**

சென்னைவானகரம் காவல் நிலைய ஆய்வாளர் மகேஸ்வரி தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் நேற்று முன் தினம் காலை, வானகரம் பூந்தமல்லி சர்வீஸ் ரோட்டில் கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த நபரிடம் விசாரணை செய்து, அவர் அருகில் மறைத்து வைத்திருந்த சாக்கு பையை சோதனை செய்தபோது, சட்டவிரோதமாக மதுபாட்டில்களை மறைத்து வைத்து விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.

அதன்பேரில், வானகரம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்ட விரோதமாக மது பாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த மனோஜ்குமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து கொண்ட 114 மதுபாட்டில்கள், 8 பீர் பாட்டில்கள் என மொத்தம் 122 மதுபாட்டில்கள் மற்றும் பணம் ரூ.4,590 ஐ பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் மனோஜ்குமார் மீது ஏற்கனவே மதுபாட்டில்கள் விற்பனை செய்த குற்றத்திற்காக ஒரு வழக்கு உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சென்னையில் இரு இடங்களில் போதை மாத்திரை விற்ற 4 பேர் கைது

**சென்னை டிச 18-**

சென்னை எம்.கே.பி. நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், வியாசர்பாடி, பி.வி. காலனி, நேதாஜி மைதானம் அருகே கண்காணித்து, அங்கு, உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த எதிரி சரத்குமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 500 எண்ணிக்கைகள் கொண்ட என்ற உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி சரத்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும், தேனாம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் நந்தனம், எஸ்.எம். நகர் சிறுவர் பூங்கா அருகில் கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் கஞ்சா வைத்திருந்த 1.விக்னேஷ், 2.தனுஷ், 3.ஆனந்தராஜ், ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 50 டைடல் உடல்வலி நிவாரண மாத்திரைகள், 110 கிராம் கஞ்சா மற்றும் பணம் ரூ.9,510 ,ஐ பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரிகள் விக்னேஷ் மீது வழிப்பறி வழிப்பறி உட்பட 6 குற்ற வழக்குகளும், தனுஷ் மீது 3 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# சென்னையில் பல்வேறு வழக்கில் தலைமறைவான 3குற்றவாளிகள் கைது

**சென்னை டிச 18-**

சென்னையில் கடந்த 2024ம் ஆண்டு இராஜமங்கலம் பகுதியில் உள்ள ஒரு கோயில் உண்டியலை உடைத்து பணத்தை திருடியது தொடர்பான இராஜமங்கலம் காவல் நிலைய வழக்கில் எதிரி சந்தோஷ், என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற எதிரி சந்தோஷ் எழும்பூர், 13வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு முறையாக ஆஜராகாமல் தலைமறைவானதால், எதிரி சந்தோஷ் மீது நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.இராஜமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டு பல்வேறு இடங்களில் தேடி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி சந்தோஷ், என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி சந்தோஷ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது. மேலும் சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் தாக்கலான கொலைமுயற்சி வழக்கில் தொடர்புடைய எதிரி கலை விகாஷ் (எ) விகாஷ் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்று, சென்னை, உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள 6வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி கலை விகாஷ் (எ) விகாஷ் என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 12.ந் தேதி அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி கலைவிகாஷ் (எ) விகாஷ், என்பவரை கைது செய்து நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது

# மின்சார சிக்கன வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி: சேலம் அய்யந்திருமாளிகையில் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள்

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் வழங்கினார்



**சேலம்,டிச.18-**

சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மின்சார சிக்கன வார விழா வினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை (17.12.2025) சேலம் அய்யந்திருமாளிகையில் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மின்சார சிக்கன வார விழா இந்த வருடம் டிசம்பர் 14 முதல் டிசம்பர் 20 வரை கொண்டாடப்படுகிறது மின் சிக்கனம் என்பது தனி நபர் பொறுப்பு மட்டுமல்ல, நாட்டின் வளர்ச்சிக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் மின் சிக்கனத்தை கடைபிடிப்பது அனைவரின் கடமையாகும். அந்தவகையில் இன்றையதினம் மின்சார சிக்கன வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியினை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மின் நுகர்வோரின் புகார்களை 94987 94987 என்ற தொலைபேசி எண் மூலம் தெரிவிக்க ஏதுவாக கடந்த 20.06.2021 அன்று மின்னகம் துவக்கி வைக்கப்பட்டு சேலம் மாவட்டத்தில் இதுவரை மின்னகம் மூலம் பெறப்பட்ட 92,629 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், மின் நுகர்வோருக்கு சீரான மின்சாரம் வழங்கும் வகையில் ரூ.23.06 கோடி மதிப்பீட்டில் 402 புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. சூரிய சக்தி மின் திட்டத்தின் மூலம் 2,539 சூரிய சக்தி மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மின்சார சிக்கன பாதுகாப்பு வழிமுறைகள் நட்சத்திர குறியீடு கொண்ட மின் சாதனங்களை பயன்படுத்தவும். ஆளில்லாத அறையில் ஓடும் மின் விசிறி, மின் விளக்குகள் அணைக்கவும். AC-ஐ 25°C ல் இயக்குவது, மின் ஒயரிங் வேலைகளை அரசு உரிமம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் செய்ய வேண்டும். ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற நட்சத்திரக் குறியிட்ட மின் சாதனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ப்ரிட்ஜ், கிரைண்டர் போன்றவற்றிற்கு நில இணைப்புடன் (Earth) கூடிய மூன்று பின் சாக்கெட் உள்ள மின் பிளக்குகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் உள்ளிட்ட கருத்துக்களை பொது மக்களுக்கு வலியுறுத்தும் வகையில் இப்பேரணி நடத்தப்பட்டது.

உடைந்த சுவிட்சுகள், பிளக்குகள், பழுதுபட்ட ஒயர்கள், மின்சாதனங்கள் உங்கள் பயன்பாட்டில் இருப்பின், அவற்றை தாமதமின்றி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். பிளக் பாயிண்ட்களில் குளவிக் கூடு கட்டாமல் இருக்க துளை அடைப்பான் உள்ள பிளக் பாயிண்ட்களை பயன்படுத்திடவும், ஆர்.சி.சி.பி.-யை வீடுகளில், மெயின் ஸ்விட்ச் போர்டில் பொருத்தி மின் கசிவால் ஏற்படும் விபத்தை தவிர்த்திடவும் இப்பேரணியில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், இருமுறை மின்சாரத்தில் பம்பு செட்டை இயக்காமல் மும்முனை மின்சாரத்தில் பம்பு செட்டை இயக்கிடவும், தரமான மின்சாரம் கிடைக்க ஐ.எஸ்.ஐ. முத்திரையிட்ட நட்சத்திரக் குறியிட்ட மின் சக்தி சேமிக்கும் பம்பு செட்டை உபயோகிக்கவும், அனைவருக்கும் மின்சாரம் தொடர்ந்து கிடைக்க தேவைக்கேற்ப பம்பு செட்டை இயக்கவும், திறன் மிக்க மின் சாதனங்களை தேர்வு செய்து, நன்கு பராமரித்து, மின் செலவைக் குறைத்திடவும், அதே போன்று அறுந்து விழுந்த மின் கம்பிகளை கண்டால் உடனே அருகில் உள்ள மின் வாரிய அலுவலகத்திற்கு அல்லது (மின்னகம்) 94987 94987 எண்ணிற்கு தொடர்பு கொள்வது குறித்தும் உள்ளிட்ட கருத்துக்களை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இவ்விழிப்புணர்வு பேரணியானது சேலம் ஏற்காடு மெயின் ரோடு அய்யந்திருமாளிகையில் தொடங்கி அஸ்தம்பட்டி ரவுண்டானா வந்தடைந்தது.

இவ்விழிப்புணர்வு பேரணியில் மாநகராட்சி துணை மேயர் மா.சாரதாதேவி, தமிழ்நாடு மின்பகிர்மான கழக மேற்பார்வை பொறியாளர் திருநாவுக்கரசு, செயற்பொறியாளர் இராமச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், மின்சாரத் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், 500- க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 30 நபர்களுக்கு ரூ.1கோடியே 73 லட்சம் மானியத்தில் தொழிற் கடனுக்கான காசோலைகள்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் வழங்கினார்



**கிருஷ்ணகிரி,டிச.18-**

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, மாவட்ட தொழில் மையம் நடத்திய மாபெரும் தொழிற்கடன் வசதியாக்கல் முகாம் மற்றும் மானியத் திட்டங்கள் குறித்த விளக்க கூட்டத்தில் கலெக்டர் ச.தினேஷ் குமார் 30 தொழில் முனைவோர்களுக்கு ரூ.1 கோடியே 73 இலட்சம் மானியத்தில் தொழிற் கடனுக்கான காசோலைகளை (17.12.2025) வழங்கினார்.

கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திறன் பெற்றதாகவும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் பங்களிப்பதாகவும் உள்ளதால் தமிழ்நாடு அரசு, கிருஷ்ணகிரி மாவட்ட குறு, சிறு மற்றம் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக 2025-26 ஆம் ஆண்டில் ரூ.6620.25 கோடி மதிப்பில் கடன் வழங்கவேண்டுமென ஆண்டுக் கடன் திட்ட அறிக்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை வென்றடைய, காலாண்டுக் கொருமுறை தொழிற்கடன் வழங்கும் கூட்டம் நடத்தப்பட வேண்டுமென மாவட்ட தொழில் மையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆண்டு கடன் திட்டத்தின் படி யுnரெயட ஊசநனவை Pடயn (யுஊP) 01.04.2025 முதல் 30.09.2025 வரை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ரூ.4386.17 கோடி (66.25மூ) தொழில் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுய வேலை வாய்ப்பு உருவாக்கும் பொருட்டு மாவட்ட தொழில் மையம் மூலம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தில் (Nநுனுளு) உற்பத்தி மற்றும் சேவை பிரிவின் கீழ் தொழில் தொடங்க 25மூ மானியத்துடன் கூடிய ரூ.5 கோடி வரை தொழிற்கடன் மற்றும் 3மூ பின்முனை வட்டி மானியம் வழங்கப்படுகிறது. படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில்; (ருலுநுபுP) வியாபாரம் செய்ய 25மூ மானியத்துடன் கூடிய ரூ.15 இலட்சம் வரை தொழிற்கடன் வழங்கப்படுகிறது.

பாரத பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் (PஆநுபுP) உற்பத்தி மற்றம் சேவை பிரிவின் கீழ் தொழில் தொடங்க நகர்புறங்களில் 25மூ மற்றும் கிராமப்புறங்களில் 35மூ மானியத்;துடன் ரூ.50 இலட்சம் வரை உற்பத்தி தொழிலுக்கும் ரூ.20 இலட்சம் வரை சேவை சார்ந்த தொழிலுக்கும் தொழிற்கடனாக வழங்கப்படுகிறது. பிரதம மந்திரியின் உணவு பதபடுத்தும் குறு, சிறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (Pஆகுஆநு). இத்திட்டத்தில் மானியம் திட்ட மதிப்பீட்டில் 35மூ அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வழங்கப்படும்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (யுயுடீஊளு). இத்திட்டத்தில் மானியத் தொகை திட்ட தொகையில் 35மூ மானியம் அதிகபட்சம் ரூ1.5 கோடி வரை வழங்கப்படும். கலைஞர் கைவினைத் திட்டம் (முமுவு) திட்டத்தில் மானியத் தொகை திட்ட தொகையில் 25மூ மானியம் அதிகபட்சம் ரூ.50 ஆயிரம் வரை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், 01.04.2025 முதல் 16.12.2025 வரை 441 பயனாளிகளுக்கு ரூ.957.27 இலட்சம் மதிப்பில் தொழில் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மகளிர் சுய உதவிக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் இந்த திட்டத்தை பயன்படுத்தி தொழில் தொடங்கி பயனடையலாம் என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, கலெக்டர் , கலைஞர் கைவினைத் திட்டம், வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்;, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், பிரதான் மந்திரி உணவு பதபடுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 30 நபர்களுக்கு ரூ.1 கோடியே 73 இலட்சம் மானியத்தில் தையல் தொழில், துணி வியாபாரம், மளிகை கடை, ஆட்டோ உதிரி பாகங்கள் உற்பத்தி, சிகை அலங்காரம், கட்டுமான தொழில், சிற்ப வேலைப்பாடு, பொறி, தின்பண்டங்கள் உற்பத்தி, மக்காச்சோளம், வெள்ளரிக்காய், மிளகாய் சார்ந்த பொருட்கள் உற்பத்தி, தேங்காய் சார்ந்த உணவுப் பொருட்கள் உற்பத்தி தொழிலுக்கான காசோலைகளையும், கலைஞர் கைவினை திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 10 நபர்களுக்கு பயிற்சி சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட அலுவலர் பெரியசாமி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் பிரசன்ன பாலமுருகன், இந்தியன் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் சரவணன், மாவட்ட தொழில் மைய உதவி இயக்குநர் ராமமூர்த்தி மற்றும் அனைத்து வங்கிகளின் ஒருங்கிணைப்பாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# திம்மாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி செயல்விளக்கம்

**காவேரிப்பட்டணம்,டிச.18-**

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் திம்மாபுரம் கிராமத்தில் ஆதியமான் வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள் மாடுகள் பராமரிப்பு மற்றும் நிலத்தழை அடுக்கல் முறைகள் குறித்து பயிற்சி மற்றும் செயல்விளக்கம் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி அலுவலர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாடுகளுக்கான சரியான பராமரிப்பு முறைகள், உணவளித்தல், நோய் தடுப்பு நடவடிக்கைகள், சுகாதார மேலாண்மை ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் பழமரங்களில் நிலத்தழை அடுக்கல் முறையின் முக்கியத்துவம், அதன் செய்முறை, நன்மைகள் மற்றும் உற்பத்தி அதிகரிக்கும் விதம் குறித்து மாணவர்கள் நேரடி செயல்விளக்கம் மூலம் விளக்கினர்.

இந்த பயிற்சி மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சியில் திம்மாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இத்தகைய நிகழ்ச்சிகள் விவசாயிகளின் அறிவை மேம்படுத்தி, நிலையான வேளாண்மை வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என தெரிவித்தனர்.

# ஊத்தங்கரை யுனிக் கல்லூரியில் இந்திய செஞ்சுருள் சங்க துவக்க விழா: தாளாளர் அருள் பங்கேற்பு



**கிருஷ்ணகிரி,டிச.18-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த காரப்பட்டு யுனிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் இந்திய செஞ்சுருள் சங்க துவக்க விழா நடைபெற்றது கல்லூரியின் முதல்வர் மற்றும் தாளாளர் முனைவர் க. அருள் தலைமையுரையாற்றி துவக்கி வைத்தார். மேலும் மாவட்ட பால்வினை நோய் தடுப்பு அலுவலர் திரு பாலமுருகன் மற்றும் எச் .ஐ வி. தடுப்பு சங்க தலைவர் திரு குமார், அரசு மருத்துவமனை செவிலியர் மோனிஷா ஆகியோர் பால்வினை நோய்களுக்கான விழிப்புணர்வு குறித்து மாணவர்களிடையே உரையாற்றினர் . இந்நிகழ்வை கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.மோகனா வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் வரவேற்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் துணை முதல்வர்,முனைவர் வெங்கடாச்சலம் சிறப்புரை ஆற்றினார். அதனை தொடர்ந்து கணினி அறிவியல் துறை தலைவர் சங்கர் மாணவர்களுக்கு RRC - யின் முக்கியத்துவத்தை எடுத்துரைதார். மேலும் இந்நிகழ்வின் பல்துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 50 க்கும் மேற்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து பிற்பகல் நிகழ்வாக மாணவர் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்று களப்பணி மற்றும் ஆய்வாகத்தை பார்வையிட்டானார் மற்றும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தப்பட்டது. இறுதியாக வேதியியல் துறை உதவி பேராசிரியர் . பிரவீணா நன்றி உரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியை தமிழ் துறை உதவி பேராசிரியர் . பிரகதீஸ்வரன் தொகுத்து வழங்கினார்

# நாமக்கல் மாவட்ட இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் முகாம்

## கலெக்டர் துர்காமூர்த்தி பார்வையிட்டார்

**நாமக்கல்,டிச.18-**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எளையாம்பாளையம் விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (17.12.2025) மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் துர்காமூர்த்தி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்-2026-ன் தொடர்ச்சியாக இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கையாக நடைபெற்ற முகாமில் கலந்து கொண்டு, கல்லூரி மாணவியர்களுக்கு படிவம் 6-னை வழங்கி, பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை பெற்றுக் கொண்டார்.

மா வட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் துர்காமூர்த்தி, தெரிவித்ததாவது,

நா மக் கல் மாவட்டத்தில், 92.இராசிபுரம், 93.சேந்தமங்கலம், 94. நாமக்கல், 95.பரமத்தி வேலூர், 96.திருச் செங்கோடு, 97.குமாரபாளையம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகள் உள்ளது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், அங்கீகரிக்கப்படாத கட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பணிகள் ஆகியவை குறித்து இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும். மாணவ, மாணவியர்கள் குழுவாக பிரிந்து இது குறித்து விவாதிக்கும் பொழுது பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்ள இயலும். தேர்தல் நாளன்று வாக்காளர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களித்து தங்களது ஜனநாயக கடமையை ஆற்றிட வேண்டும். அதன்படி, 01.01.2026 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவர்கள், அதாவது 31.12.2007 அன்றோ அல்லது

அதற்கு முன்னரோ பிறந்தவர்கள் மற்றும் இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காதவர்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் புதியதாக சேர்த்திட வேண்டும்.

. அதனைத் தொடர்ந்து, இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கையாக 01.01.2026 தகுதி நாளில் 18 வயது பூர்த்தி அடையும் இளம் வாக்காளர்களிடம் படிவம் 6-ஐ பெற்று தொடர்புடைய பாகம் எண்ணில் சேர்க்கும் நடவடிக்கை சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரு கி றது.இம் மு கா மில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் பி.எஸ்.லெனின், கல்லூரி முதல்வர், ரெட் கிராஸ் ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்கண்ணன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாமகிரிப்பேட்டை பகுதியில் மின் விநியோகம் நிறுத்தம்

**ராசிபுரம்,டிச.18-**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை துணைமின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் 19.12.2025ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நாமகிரிப்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மின்விநியோகம் நிறுத்தப்படவுள்ளது. நாமகிரிப்பேட்டை, குரங்காத்துப்பள்ளம், கோரையாறு, மூலப்பள்ளிப்பட்டி, தண்ணீர்பந்தல்காடு, அரியாக்கவுண்டம்பட்டி, பழனியப்பனூர், பச்சுடையாம்பாளையம், தொ.ஜேடர்பாளையம், வெள்ளக்கல்பட்டி, புதுப்பட்டி, சீராப்பள்ளி, காக்காவேரி, பட்டணம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் நிறுத்தப்படவுள்ளது என்பதை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், ராசிபுரம் செயற்பொறியாளர் எம்.சாந்தி இச்செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# நாமக்கல் வாசவி கிளப் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா



**ராசிபுரம்,டிச.18-**

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் போர்ட் வாசவி கிளப் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா வாசவி மகாலில் நடைபெற்றது. இவ்விழாவில் டிரஸ்ட் நிர்வாகிகளுக்கு வாசவி கிளப் சார்பில் மரியாதை செய்யப்பட்டது. சர்வதேச மாவட்ட வாசவி 501ஏ மாவட்ட ஆளுநர் ஏ. வெங்கடேஸ்வர குப்தா தலைமையில் புதிய உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் சிறந்த விருந்தினராக ஐஇசி தலைமை நிர்வாக துணைத் தலைவர் என்.பலராமன், ஐஇசி அலுவலர்கள் சத்ய நாராயணன், கௌரவ விருந்தினராக வாசவி கிளப் தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் பி.தாசப்பன் செட்டியார் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினர். பின்னர் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இவ்விழாவில் நாமக்கல் வாசவி கிளப் தலைவராக ஜெ. நாகஹரிஷ்குமார், செயலாளராக பி.மனோஜ், பொருளாளராக எஸ்.தினேஷ்குமார் மற்றும் ஒருங்கிணைப்பாளராக பிரனேஷ் பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


**NOTICE**
**IN THE HIGH COURT OF JUDICATURE OF BOMBAY BENCH AT AURANGABAD**
**FIRST APPEAL NO. 16 OF 2024**
FROM ORIGINAL DECREE
**M.A.C.P. No. 462/2010 in Passed by The Member, Motor Accident Claims Tribunal, Jalgaon**
**Shaikh Bashiroddin Allauddin Shaikh .....Appellant/s**
**V/S**
**Shri. Vyankatchalam S. Subramanium Chinttam & Ors. .....Respondent/s**
**To,**
**R. No. 2) Shri. S. Ramesh Sengondan, Age : Major, Occu.: Truck Owner, R/o. 2/237, Virankadu Gaudipalayam, Thokawadi (PO) Tal. Tiruchengod, Dist. Namakkal Pin-637211.**
residing at the aforesaid place

Take notice that a First Appeal from the decree of **M.A.C.P. No. 462/2010 in Passed by The Member, Motor Accident Claims Tribunal, Jalgaon** has been presented by the aforesaid appellant and registered in this Court and it is ordered by this Court that the **hearing** of the said appeal will take place on **09th day of January 2026 or on any subsequent day which to this Court may seem convenient.**

If no appearance is made on your behalf by yourself, your Advocate or by someone by law authorized to act for you in this **First Appeal** it will be heard and decided ex-parte in your absence. Witness **SHRI JUSTICE SHREE CHANDRASHEKHAR,** Chief Justice at Bombay aforesaid. This 12th **day of November, 2025.**

Court Seal

**By the Court, Sd/- For Deputy Registrar This 12th day of November, 2025**



வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
கிருஷ்ணகிரி
ந.க.எண்.மே.எ.அதிமு.5983/2025/டி
நாள்: 19.08.2025
முருகேசன், த/பெ.சென்னபோயன், கதவு எண்.202, கோடாலவலசை கிராமம், நடுப்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ......மனுதாரர்
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி. ........எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய, எனது தந்தை திரு.ஊமையன் (எ)சென்னபோயன் த/பெ.லேட்.கொண்டாபோயன் என்பவர் கடந்த 03.05.2003-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நடுப்பட்டி அஞ்சல், கோடாலவலசை கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
முருகேசன், த/பெ.சென்னபோயன், கதவு எண்.202, கோடாலவலசை கிராமம், நடுப்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்
செல்: 8489582461



வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
கிருஷ்ணகிரி
ந.க.எண்.மே.எ.அதிமு.9325/2025/டி
நாள்: 11.12.2025
முரளி, த/பெ.லேட்.மணி, சின்னமுத்தூர் கிராமம், சுண்டேகுப்பம் அஞ்சல், கிருஷ்ணகிரி மாவட்டம் ......மனுதாரர்
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி. ........எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய, எனது தந்தை திரு.மணி த/பெ.லேட்.ராஜகோபால் என்பவர் கடந்த 20.11.1995-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், சுண்டேகுப்பம் அஞ்சல், சின்னமுத்தூர் கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
முரளி, த/பெ.லேட்.மணி, சின்னமுத்தூர் கிராமம், சுண்டேகுப்பம் அஞ்சல், கிருஷ்ணகிரி மாவட்டம்
செல்: 7639925685



Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (க & ப) வட்டம் 1, சேப்பாக்கம், சென்னை–05.

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 89/2025 – 2026 / க(க&ப)வ–1/ சென்னை / நாள்: 16.12.2025**
**ஒப்பந்தம்–Lumpsum / (இணையதள வழியில் மட்டும்)**
தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண், | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணிமுடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | இரு உறை முறை | | | |
| 1. | சென்னை-03, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உடன் இணைந்த MMC-இல் உள்ள செவிலியர் இல்ல விடுதி கட்டிடத்தில், கசிவு கூரை, கழிவறைகள், Joineries, வடிகால் அமைப்பு, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார ஏற்பாடுகளுக்கான சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் இது தொடர்பான பிற சிவில் பணிகளை செய்யும் பணி | ரூ.535.33 இலட்சங்கள் | ரூ.2,78,000/- 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு - II மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **http://tntenders.gov.in.** 2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். **02.01.2026** 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் **07.01.2026 மாலை 3.00 மணி வரை.** 4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் **07.01.2026 மாலை 4.00 மணி.** 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் **http://tntenders.gov.in** இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்

**கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம் 1, சேப்பாக்கம், சென்னை–05.**
செ.ம.தொ.இ/6670/ஒப்பந்தப்புள்ளி/2025



தமிழ்நாடு அரசு / **பொதுப்பணித்துறை**
கட்டட (க & பரா) வட்டம், மதுரை – 625 002.
**விலை விகித முறை**
**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.39 க.பொ./க (க & ப) வட்டம், மதுரை / 2025–2026 / நாள்: 16.12..2025.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க & ப ) வட்டம், மதுரை அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 2 (இரண்டு) பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. இரண்டு பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : **23.12.2025 முதல் 31.12.2025 மாலை 3.00 மணி வரை.**
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : **31.12.2025 மாலை 3.00 மணி வரை.**
4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **31.12.2025 மாலை 4.30 மணி முதல்.**
5. ஒப்பந்ததாரர் பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் **26.12.2025.**
6. செயற்பொறியாளரிடமிருந்து பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கான கடைசி நாள் : **30.12.2025**

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (க & பரா) வட்டம், மதுரை – 2.**
**செ.ம.தொ.இ/6667/ஒப்பந்தப்புள்ளி/2025**



தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
**கட்டடம் (க&ப ) வட்டம் தஞ்சாவூர்.**
இனவிலை முறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 57/க.பொ/க(க&ப) வட்டம்/தஞ்சாவூர்/2025-2026/ நாள்: 16.12.2025
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க&ப) வட்டம், தஞ்சாவூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 1 பணிக்கு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன.

1. புதுக்கோட்டை மாவட்டத்தில் 1 பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https:/tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : **22.12.2025 முதல் 05.01.2026 மாலை 3.00 மணி வரை.**
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **05.01.2026 மாலை 3.00 மணி வரை.**
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **06.01.2026 மாலை 3.00 மணி முதல்.**
5. விலைமாறுதல்கூறு **(Price Adjustment Clause)** இப்பணிக்கு பொருந்தும்

**கண்காணிப்பு பொறியாளர் பொபது, கட்டட (க&ப) வட்டம் தஞ்சாவூர்**
செ.ம.தொ.இ/6664/ஒப்பந்தப்புள்ளி/2025

டி-20 பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் புதிய சாதனை:

# அதிக புள்ளிகள் பெற்ற முதல் இந்திய வீரர் வருண் சக்ரவர்த்தி



**துபாய், டிச. 18-**

ஆடவருக்கான தரவரிசை பட்டியலை சிறிய மாற்றத்துடன் ஐ.சி.சி. நேற்று வெளியிட்டது. அதில் டி-20 பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தி முதலிடத்தில் தொடர்கிறார். இதன் மூலம் டி-20 பந்து வீச்சாளர்கள் தரவரிசை புள்ளிகளில் அதிக புள்ளிகள் பெற்ற முதல் இந்தியர் என்ற வரலாற்று சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

**818 புள்ளிகளுடன்....**

இந்நிலையில் தென் ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான டி-20 தொடரில் சிறப்பாக பந்துவீசிய நிலையில், வருண் சக்ரவர்த்தி 818 புள்ளிகளை பெற்று அசத்தியுள்ளார். இதன் மூலம் டி-20 பந்து வீச்சாளர்கள் தரவரிசை புள்ளிகளில் அதிக புள்ளிகள் பெற்ற முதல் இந்தியர் என்ற வரலாற்று சாதனையை வருண் சக்கரவர்த்தி படைத்துள்ளார். மேலும் டி-20 பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் அதிக புள்ளிகள் பெற்ற வீரர் 8-வது வீரர் என்ற சாதனையை வருண் சக்கரவர்த்தி படைத்துள்ளார். இந்த பட்டியலில் பாகிஸ்தான் வீரர் உமர் குல் (865 புள்ளிகள்) முதல் இடத்தில் உள்ளார்.

### அதிக புள்ளிகள் பெற்ற வீரர்கள்:

1) உமர் குல் (பாகிஸ்தான்) 865.
2) சாமுவேல் பத்ரீ (வெஸ்ட் இண்டீஸ்) 864.
3) டேனியல் வெட்டோரி (நியூசிலாந்து) 858.
4) சுனில் நரைன் (வெஸ்ட் இண்டீஸ்) 832.
5) ரஷித் கான் (ஆப்கானிஸ்தான்) 828.
6) தப்ரைஸ் ஷம்சி (தென்னாப்பிரிக்கா) 827.
7) ஷாஹித் அப்ரிடி (பாகிஸ்தான்) 822.
8) வருண் சக்ரவர்த்தி (இந்தியா) 818.
9) ஷதாப் கான் (பாகிஸ்தான்) 811.
10) வனிந்து ஹசரங்கா (இலங்கை) 809.

கண் தானம் செய்வீர்

# ஓமன் சென்றார் பிரதமர் மோடி

**அட்டிஸ் அபாபா, டிச. 18-**

எத்தியோப்பியா சுற்றுப்பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி ஓமன் நாட்டுக்கு சென்றார்.

பிரதமர் நரேந்திர மோடி ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். முதல் ஜோர்டான் நாட்டுக்கு சென்ற பிரதமர் மோடி, அங்கு, அந்நாட்டின் மன்னர் அப்துல்லா-II முன்னிலையில் நடைபெற்ற இந்தியா - ஜோர்டான் முதலீட்டாளர் சந்திப்பில் உரையாற்றினார். மேலும் இந்தியா - ஜோர்டான் இடையே ஐந்து ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

ஜோர்டான் பயணத்தை முடித்துவிட்டு, பிரதமர் மோடி எத்தியோபியா சென்றடைந்தார். இந்த பயணத்தின்போது, இந்தியா-எத்தியோப்பியா இடையிலான இருதரப்பு உறவுகளின் முன்னேற்றம் குறித்து எத்தியோபியா பிரதமர் அபி அகமது அலியுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். தொடர்ந்து எத்தியோப்பியாவின் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். மேலும், பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருதான 'தி கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா' வழங்கப்பட்டது. இந்த கவுரவ விருதை பெறும் முதல் உலகத் தலைவர் என்ற பெருமையை பிரதமர் மோடி பெற்றுள்ளார்.

இந்நிலையில், எத்தியோப்பியா சுற்றுப்பயணத்தை நிறைவு செய்த பிரதமர் மோடி, அங்கிருந்து ஓமன் நாட்டிற்கு புறப்பட்டுச் சென்றார். அந்நாட்டின் மன்னரும், பிரதமருமான சுல்தான் ஹைதம் பின் தாரிக்கின் அழைப்பை ஏற்று பிரதமர் மோடி ஓமனுக்குப் பயணம் மேற்கொள்கிறார். இந்தப் பயணத்தின்போது, இந்தியா-ஓமன் இடையிலான மூலோபாயப் பங்களிப்பை வலுப்படுத்துவது குறித்தும், வலுவான வர்த்தக மற்றும் பொருளாதார உறவை ஏற்படுத்துவது குறித்தும் சுல்தானுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற தியாகராயநகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி மகன் சிபி - வர்ஷா (எ) வர்ஷலட்சுமி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார்.

வருகிற 22-ம் தேதி

# புதிய காவல் நிலையங்களை துவக்கி வைக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, டிச. 18-**

தமிழ்நாடு காவல்துறையில் உருவாக்கப்பட்டுள்ள 3 புதிய சப்-டிவிஷன் மற்றும் 10 புதிய காவல் நிலையங்களை முதல்வர் வரும் 22ம் தேதி தொடங்கி வைக்கிறார்.

அதன்விவரம் வருமாறு., புதிய உட்கோட்டங்கள்:- காஞ்சிபுரம் மாவட்டம் - உத்திரமேரூர், நாகை மாவட்டம் - வேளாங்கண்ணி, நாமக்கல் மாவட்டம் - பள்ளிப்பாளையம்.



புதிய காவல் நிலையங்கள் வருமாறு., நாமக்கல் மாவட்டம்- கொக்கராயன் பேட்டை, தர்மபுரி மாவட்டம் - புளிக்கரை, சிவகங்கை மாவட்டம் - கீழடி, கள்ளக்குறிச்சி மாவட்டம் - களமருதூர், திருவண்ணாமலை மாவட்டம்- திருவண்ணாமலை கோவில் காவல் நிலையம், மதுரை மாநகரம் - சிந்தாமணி, மதுரை மாநகரம் - மாடகுளம், கோயமுத்தூர் மாவட்டம் - நீலாம்பூர், நெல்லை மாநகர் - மேலவாசல், திருப்பூர் மாவட்டம் - பொங்கலூர்.

# மருத்துவமனையில் ஜெய்ஸ்வால்?

சையத் முஷ்டாக் அலி டிராபி டி20 தொடரின் நேற்றைய போட்டியில் ராஜஸ்தான் - மும்பை அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ராஜஸ்தான் அணி 20 ஓவரில் 216 ரன்கள் எடுத்தது. இதனையடுத்து களமிறங்கிய மும்பை அணி 18.1 ஓவரில் 217 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. முன்னதாக இந்த போட்டியில் ஜெய்ஸ்வால் 16 பந்துகளில் 15 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். போட்டி முடிந்த பிறகு அவருக்குத் திடீரென கடுமையான வயிற்றுப் பிடிப்பு மற்றும் வலி ஏற்பட்டது. வலி அதிகமானதால், உடனடியாக அவர் பிம்ப்ரி-சிஞ்ச்வாட் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அவசர அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டார். மருத்துவர்கள் அவரைப் பரிசோதித்ததில், அவருக்குத் தீவிரமான இரைப்பை குடல் அழற்சி பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

சிகிச்சைக்குப் பிறகு, அவர் தொடர்ந்து மருந்துகளை எடுத்துக் கொண்டு முழு ஓய்வெடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இந்திய அணியின் நட்சத்திர இளம் வீரர் யஷஸ்வி ஜெய்ஸ்வால் திடீரென மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் கிரிக்கெட் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கார்த்திக் சர்மா உருக்கம்

ஐபிஎல் தொடரின் 19-வது சீசனுக்கான மினி ஏலம் நடைபெற்றது. இதில் ராஜஸ்தானை சேர்ந்த 19 வயதான கார்த்திக் சர்மா (அன்கேப்ட் வீரர்) அடிப்படை விலை ரூ.30 லட்சத்தில் இருந்து ரூ.14.20 கோடிக்கு ஏலம் போனார். இவரை சி.எஸ்.கே. அணி ஏலம் எடுத்தது. கார்த்திக் சர்மாவை வாங்க ஆரம்பத்தில் லக்னோ மற்றும் மும்பை அணிகள் ஆர்வம் காட்டின. பின்னர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தீவிரமாகப் களமிறங்கியது. கொல்கத்தா அவரை வாங்கிவிடும் என்று நினைத்த நேரத்தில், சி.எஸ்.கே. உள்ளே புகுந்து விலையை எகிற வைத்தது. 10 கோடியைத் தாண்டியதும் ஐதராபாத் அணி போட்டிக்கு வந்தது. ஆனால், விடாப்பிடியாக நின்ற சி.எஸ்.கே., இறுதியில் ரூ.14.2 கோடிக்கு கார்த்திக் சர்மாவைத் தட்டித் தூக்கியது.

ஏலத்தை கார்த்திக் சர்மா, நேரலையில் பார்த்துக் கொண்டிருந்தார். தனக்கான ஏலம் தொடங்கிய விதம் குறித்தும், அது முடிந்த பிறகு தனது மனநிலை குறித்தும் அவர் உருக்கமாகப் பேசியுள்ளார். அதில், நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். ஆனால் அந்தத் தருணத்தில் என்னால் அழுகையை அடக்க முடியவில்லை. ஏலம் தொடங்கியபோது, 'என்னை யாரும் எடுக்க மாட்டார்களோ?' என்று பயந்தேன். ஆனால் ஏலம் சூடுபிடித்துத் தொகை எகிறத் தொடங்கியதும், என் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டத் தொடங்கியது.

ஏலம் முடிந்த பிறகும் நான் அழுதுகொண்டே இருந்தேன். என்னைச் சுற்றியிருந்தவர்கள் எல்லாம் மகிழ்ச்சியில் நடனமாடினார்கள். ஆனால் நானோ அழுதுகொண்டிருந்தேன். அந்த அளவுக்கு நான் மகிழ்ச்சியாக இருந்தேன். என் உணர்வுகளை விவரிக்க வார்த்தைகளே இல்லை. முதல்முறையாக நான் மஹி பாய் (தோனி) உடன் விளையாடப் போகிறேன். அவரிடம் இருந்து நிறையக் கற்றுக்கொள்ளலாம் என்பதால் மிகவும் உற்சாகமாக இருக்கிறேன். முதன்முறையாக ஏலத்தில் எடுக்கப்பட்டதே இவ்வளவு பெரிய தொகைக்கு என்பது நம்பமுடியாத ஒன்று என கார்த்திக் கூறினார்.

சுமார் ரூ.10.91 கோடி மதிப்புள்ள

# கைக்கடிகாரத்தை மெஸ்ஸிக்கு பரிசளித்தார் ஆனந்த் அம்பானி

**புதுடெல்லி, டிச. 18-**

சுமார் ரூ.10.91 கோடி மதிப்புள்ள கைக்கடிகாரத்தை மெஸ்ஸிக்கு ஆனந்த் அம்பானி பரிசளித்தார்.

**14 ஆண்டுக்கு பிறகு...**

கால்பந்து உலகின் சூப்பர் ஸ்டாரும், அர்ஜென்டினா அணியின் கேப்டனுமான லயோனல் மெஸ்ஸி, 'கோட் இந்தியா டூர் 2025' என்ற பெயரில் 14 ஆண்டுக்கு பிறகு மூன்று நாள் சுற்றுப்பயணமாக கடந்த 13-ம் தேதி இந்தியாவுக்கு வந்தார். முதலில் கொல்கத்தாவுக்கு சென்ற அவர் தனது 70 அடி உருவச்சிலையை திறந்து வைத்தார். ஆனால் அங்கு சால்ட்லேக் ஸ்டேடியத்தில் நடந்த பிரமாண்டமான நிகழ்ச்சியில் வெறும் 15 நிமிடங்களில் வெளியேறியதால் ஆத்திரமடைந்த ரசிகர்கள் ஸ்டேடியத்தை சூறையாடினர்.

**கால்பந்து போட்டிக்கு...**

இதனால் குழப்பம் ஏற்பட்டாலும் அவரது பயணம் தடங்கலின்றி தொடர்ந்தது. பின்னர் ஐதராபாத், மும்பை சென்ற மெஸ்சி அங்கு நடந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அதைத் தொடர்ந்து மெஸ்ஸி மும்பையில் இருந்து தனி விமானத்தில் டெல்லிக்கு சென்றார். மெஸ்ஸியின் வருகையொட்டி டெல்லியில் உள்ள அருண்ஜெட்லி கிரிக்கெட் ஸ்டேடியத்தில் பிரபலங்களுக்கான கண்காட்சி கால்பந்து போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**ரசிகர்கள் திரண்டனர்....**

மெஸ்ஸியை காண மைதானத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் திரண்டு இருந்தனர். மெஸ்ஸி நுழைந்ததும் அவரது பெயரை உச்சரித்து ரசிகர்கள் ஆர்ப்பரித்தனர். இளம் கால்பந்து வீரர்களுடன் சிறிது நேரம் விளையாடிய மெஸ்ஸி, பின்னர் மைதானத்தில் கரைபுரண்ட உற்சாக வெள்ளத்திற்கு மத்தியில் வலம் வந்தார். மெஸ்ஸியுடன், இண்டர் மியாமி கிளப் வீரர்கள் ரோட்ரிகா டி பால், லூயிஸ் சுவாரஸ் ஆகியோரும் வந்திருந்தனர்.



**12 கைக்கடிகாரங்கள்....**

இதன்பின்னர் மெஸ்சியுடன், நட்சத்திர கால்பந்து வீரர்களான லூயிஸ் சுவாரெஜ் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் குஜராத்தின் ஜாம்நகருக்கு இரவில் வந்தடைந்தனர். அவர், வந்தாரா வனவாழ் மீட்பு மற்றும் பாதுகாப்பு மையத்திற்கு சென்றனர். அவரை அந்த மையத்தின் நிறுவனர் மற்றும் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் இயக்குநரான ஆனந்த் அம்பானி வரவேற்றார். இந்த நிலையில், இந்த நிகழ்வின் போது மெஸ்ஸிக்கு கைக்கடிகாரத்தை ஆனந்த் அம்பானி பரிசளித்தார். ரிச்சர்ட் மில் RM 003 V2 ஆசிய எடிஷன் கைக்கடிகாரத்தை மெஸ்ஸிக்கு பரிசளித்த ஆனந்த் அம்பானி பரிசளித்தார். இதன் மதிப்பு சுமார் ரூ.10.91 கோடியாகும். உலகிலேயே இந்த எடிஷனில் 12 கைக்கடிகாரங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளன.

# மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை கண்காட்சி

## துணை முதல்வர் உதயநிதி இன்று துவக்கி வைக்கிறார்

**சென்னை, டிச. 18-**

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியை துணை முதல்வர் உதயநிதி இன்று துவக்கி வைக்கிறார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்நாடு முதல்வர் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் வழிகாட்டுதலில், சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் விற்பனைக் கண்காட்சிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு சந்தைகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் வாயிலாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

தொடர்ச்சியாக, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மதி கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விற்பனைக் கண்காட்சியினை இன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் துவக்கி வைக்கிறார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமருக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருது:

# இந்தியாவின் அந்தஸ்து உயர்கிறது: அமைச்சர் அமித்ஷா பெருமிதம்

**புதுடெல்லி, டிச. 18-**

பிரதமருக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருது வழங்கியதுக்கு இந்தியாவின் அந்தஸ்து உயர்ந்துள்ளது என்று அமித்ஷா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். ஜோர்டான் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு எத்தியோப்பியா சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டின் பிரதமர் அபி அகமது அலியுடன் இந்தியா-எத்தியோப்பியா இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருதான 'தி கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா' வழங்கப்பட்டது.

இந்த நிலையில், பிரதமருக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருது வழங்கப்பட்டிருப்பது இந்தியாவின் அந்தஸ்தை பிரதிபலிக்கிறது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமையான தருணம். பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடிக்கு வெளிநாடுகளில் கிடைக்க பெற்ற 28-வது உயரிய விருது இதுவாகும். இந்த விருது பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் உலக அரங்கில் இந்தியாவின் உயர்ந்து வரும் அந்தஸ்தை பிரதிபலிக்கிறது. பிரதமருக்கு அளிக்கப்பட்ட இந்த மரியாதை இந்தியாவுக்கும் எத்தியோப்பியாவுக்கும் இடையிலான நட்புறவில் ஒரு மைல்கல்லாக நிலைத்திருக்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

# தோனியிடம் முடிந்த வரை நிறைய கற்றுக்கொள்வேன்

## சி.எஸ்.கே. வீரர் பிரசாந்த் வீர் நெகிழ்ச்சி

**சென்னை, டிச. 18-**


தோனியிடம் முடிந்த வரை நிறைய கற்றுக்கொள்வேன் என்று மினி ஏலத்தில் சி.எஸ்.கே. அணிக்கு ஏலம் எடுக்கப்பட்ட வீரர் பிரசாந்த் வீர் தெரிவித்துள்ளார்.

**அபுதாபியில்...**

19-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்கள் மினி ஏலம் அபுதாபியில் நடந்தது. இந்த ஏலத்தில் பிரசாந்த் வீர் என்ற (அன்கேப்ட் வீரர்) ஆல் ரவுண்டர் வீரரை சி.எஸ்.கே. அணி 14.20 கோடிக்கு ஏலம் போனார். இவரின் ஆரம்ப விலை ரூ.30 லட்சம் ஆகும். ஜடேஜாவிற்கு மாற்றாக பிரசாந்த் வீர் இருப்பர் என்று சி.எஸ்.கே அணி எதிர்பார்த்து இந்த விலையை கொடுத்துள்ளது.

**ஐ.பி.எல். வரலாற்றில்...**

இதனையடுத்து ராஜஸ்தானை சேர்ந்த 19 வயதான கார்த்திக் சர்மா (அன்கேப்ட் வீரர்) அடிப்படை விலை ரூ.30 லட்சத்தில் இருந்து ரூ.14.20 கோடிக்கு ஏலம் போனார். இவரையும் சி.எஸ்.கே. அணி ஏலம் எடுத்தது. இதன்மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக விலைக்கு ஏலம் போன 2 அன்கேப்ட் வீரர் வீரர்களையும் சி.எஸ்.கே அணி வாங்கியுள்ளது.



**இணைவதில் மகிழ்ச்சி...**

இந்நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடன் இணைவதில் மகிழ்ச்சி என பிரசாந்த் வீர் கூறியுள்ளார். இது குறித்து பிரஷாந்த் வீர் கூறுகையில், 'சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடன் இணைவதில் மகிழ்ச்சி. ஏனெனில் அங்கு டோனி இருக்கிறார். பேட்டிங்கில் பின்வரிசையில் ஆடுவது எளிதல்ல. அதை சிறப்பாக செய்வது தான் அவரது ஸ்பெஷல். அவரிடம் இருந்து முடிந்த வரை நிறைய கற்றுக்கொள்வேன். அவரிடம் இருந்து 4-5 சதவீதம் கற்றுக்கொண்டாலும் கூட எனக்கு பயனுள்ளதாக இருக்கும்' என்றார்.

ஆஷஸ் 3-வது டெஸ்ட் போட்டி:

# ஆஸ்திரேலியா 326 ரன்கள் குவிப்பு

**அடிலெய்டு, டிச. 18-**

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் 3-வது டெஸ்ட் போட்டியில் உஸ்மான் குவாஜா, அலெக்ஸ் கேரியின பொறுப்பான ஆட்டத்தால் ஆஸ்திரேலிய அணி 326 ரன்கள் குவித்துள்ளது.



**தொடர் வெற்றி...**

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெர்த், பிரிஸ்பேன் ஆகிய இடங்களில் நடந்த முதல் இரு டெஸ்டுகளிலும் ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்று தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

**முதலில் பேட்டிங்...**

இந்நிலையில், இவ்விரு அணிகள் இடையிலான 3-வது ஆஷஸ் டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நேற்று தொடங்கியது. இப்போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி, ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர்களாக டிராவிஸ் ஹெட், ஜேக் வெதரால்ட் களமிறங்கினர். ஹெட் 10 ரன்னிலும், ஜேக் 18 ரன்னிலும் அவுட் ஆகினர்.

**106 ரன்களில் அவுட்...**

அடுத்து களமிறங்கிய லபுஸ்சேன் 19 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த கேமரூன் கிரீன் ரன் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். பின்னர் உஸ்மான் குவாஜா, அலெக்ஸ் கேரி இருவரும் இணைந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நிலைத்து ஆடிய இருவரும் அரைசதமடித்து அசத்தினர். அரைசதம் கடந்த பிறகு கவாஜா 82 ரன்களில் வெளியேறினார். மறுபுறம் சிறப்பாக விளையாடிய கேரி சதமடித்து அசத்தினார். அவர் 106 ரன்களில் ஆட்டமிழந்தார். இறுதியில் முதல் நாள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு ஆஸ்திரேலியா 326 ரன்கள் எடுத்தது. மிட்சேல் ஸ்டார்க் 33 ரன்களுடன், நாதன் லயன் ரன் எதுவும் எடுக்காமலும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து சார்பில் ஆர்ச்சர் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

10-ம் வகுப்பு மற்றும் பிளஸ்-2

# பொதுத்தேர்வுகான தேர்ச்சி சதவீதத்தை அதிகரிக்க பள்ளிக்கல்வித்துறை தீவிரம்

**சென்னை, டிச. 18-**

10-ம் வகுப்பு, பிளஸ்-2 பொதுத்தேர்வு தேர்ச்சி சதவீதம் அதிகரிக்க பள்ளிக்கல்வித்துறை தீவிரம் காட்டி வருகிறது.

எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்-2 பொதுத்தேர்வு தேர்ச்சி சதவீதத்தை கண்டிப்பாக அதிகரித்து காட்ட வேண்டும் என்ற முனைப்பில் பள்ளிக் கல்வித் துறை களம் இறங்கியுள்ளது. கடந்த ஆண்டு பொதுத்தேர்வில் பல மாவட்டங்கள் தேர்ச்சி சதவீத பட்டியலில் பின்னுக்கு தள்ளப்பட்டிருந்தன. தலைநகராம் சென்னை தேர்ச்சி சதவீதத்தில் மிகவும் பின்தங்கி இருந்தது.

எனவே பின்தங்கிய மாணவ - மாணவிகளை அடையாளம் கண்டு, அவர்களுக்காக சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு, தேர்ச்சி பெறும் அளவுக்கு அவர்களை தயார்படுத்தி வருகின்றனர். காலாண்டு தேர்வு முடிவு அடிப்படையில் இவ்வகையான மாணவ-மாணவிகள் அடையாளம் காணப்பட்டு இருக்கின்றனர். அவர்கள் மீது அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் தனிக்கவனம் செலுத்துகின்றனர்.

இதேபோல் பள்ளி அளவில் தேர்ச்சியில் பின்தங்கிய பள்ளிகளையும் பட்டியலிட்டு, அதனை கண்காணிக்கவும் சிறப்பு அதிகாரிகளை சில மாவட்டங்களில் நியமிக்கப்பட்டு இருப்பதாகவும், அவர்களும் இந்த பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. பள்ளிக் கல்வித்துறையின் இந்த நடவடிக்கை அடுத்த ஆண்டு மே மாதத்தில் வெளியாகும் பொதுத்தேர்வு முடிவில் பிரதிபலிக்குமா? என்பதை பொறுத்து இருந்து பார்க்க வேண்டும்.

கண் தானம் செய்வீர்



மதுரை தெற்கு மாவட்டம், திருமங்கலம் சட்டமன்ற தொகுதி, கள்ளிகுடி தெற்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் அமைச்சர் கே.என்.நேரு, என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், கள்ளிக்குடி தெற்கு ஒன்றியச் செயலாளர் பா.மதன்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆதவன் அதியமான் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## வலையில் சிக்கிய ஆமைகளை பத்திரமாக மீட்டு கடலுக்குள் மீண்டும் விட்ட மீனவர்களுக்கு பாராட்டு



**ராமநாதபுரம், டிச. 18-**

வலையில் சிக்கிய ஆமைகளை பத்திரமாக மீட்டு கடலுக்குள் விட்ட மீனவர்களுக்கு ராமநாதபுரம் கலெக்டர் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் மீனவர்கள் கடலுக்கு செல்லும் போது தங்கள் வலையில் சிக்கிய ஆமைகளை பத்திரமாக மீட்டு கடலுக்குள்விட்ட மீனவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

வனத்துறை கடல்ஆமைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய முட்டையிடும் கரையோர பகுதிகளில் திட்டமிட்ட முறையில் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இயற்கை சூழல் பாதிக்கப்படாமல் கடல்ஆமை முட்டைகள் பொரிப்பகங்களில் சேகரிகப்பட்டு குஞ்சுகள் வளர்ந்த பின் முறையான கண்காணிப்புடன் கடலில் விடப்படுகின்றன. கடல் ஆமைகளை பாதுகாக்கும் பொருட்டு வனத்துறை மற்றும் தன்னார்வ அமைப்புகள் இணைந்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதனடிப்படையில் கடல்ஓசைபன்பலைவானொலியின் முன்னெடுப்பில் மீனவர்கள் கடலுக்கு செல்லும் போது தங்களது வலையில் சிக்கிய ஆமைகளை பத்திரமாக கடலுக்குள் விட்ட 12 மீனவர்களுக்கு இன்று கடல் காப்பான் விருது மற்றும் தலா ரூ.ஆயிரம் மாவட்ட கலெக்டரால் வழங்கப்பட்டது. மீனவர்களுக்கு ஆமைகளை காப்பாற்றும் வழிமுறைகள், விசைபடகு மடிகளில் டெட் கருவிகளை பொருத்துவதன் அவசியம் குறித்தும் கடல் ஓசை பண்பலை வானொலி, வனத்துறையுடன் இணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. மேலும் இதுவரை 63 மீனவர்கள் மூலமாக 124 ஆமைகள் காப்பாற்றப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வனஉயிரின காப்பாளர் அகில்தம்பி, மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை உதவி இயக்குநர் சிவக்குமார், கடல்ஓசை சமுதாய வானொலி நிர்வாக இயக்குநர் காயத்திரி மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### பத்திர எழுத்தர் சங்கத்தினர் சார்பில்
## முதல்வர் ஸ்டாலினுக்கு பாராட்டு விழா நடத்த அமைச்சர் பி.மூர்த்தியிடம் மனு

**மேலூர், டிச. 18-**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ஆவண எழுத்தர் நலநிதியம் அமைக்க 2021-2022 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, டிசம்பர் 2022-ல் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொளி மூலம் தொடங்கி வைக்கப் பட்டது. ஆவண எழுத்தர் நலநிதியம் அறிவித்ததற்கு தமிழ்நாடு பத்திர எழுத்தர் சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா நடத்துவதற்கு இசைவு தெரிவித்தும், அதற்கான இடம் மற்றும் பாராட்டு விழாவிற்க்கான தேதி வழங்க வேண்டி மாண்புமிகு பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்களிடம் கடந்த டிசம்பர் 13-ம் தேதியன்று மேலூரில் தமிழ்நாடு பத்திர எழுத்தர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் தலைவர் எஸ்.பத்மநாபன், பொதுச்செயலாளர், ஜி.கண்ணன், செயல் தலைவர் ஆர்.முருகேசன், தலைமை நிலைய செயலாளர் ஆர்.பெர்ணான்டோ மற்றும் மதுரை மாவட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள் ஆகியோர்கள் இணைந்து கோரிக்கையை மனுவாக வழங்கினார்கள். மேலும் நடைபெற இருக்கக் கூடிய பாராட்டுவிழாவில் ஆவண எழுத்தர் பயனர்களுக்கு ஆவண எழுத்தர் நலநிதியப் பயன்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் வழங்கவும், மேலும் அதே பாராட்டு விழாவில் ஆவண எழுத்தர் நலநிதியப் பயன்கள் மிகமிகக் குறைவாக உள்ளதால், பயன்களை உயர்த்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மனம் கூர்ந்து தகுந்த ஆணையையும் பிறப்பிக்கவும் வேண்டியும், பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தியிடம் வழங்கப் பட்ட மனுவில் கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

### அலங்காநல்லூர் அருகே
## புதிய தார் சாலை அமைப்பதற்கான பூமி பூஜை: வெங்கடேசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



**அலங்காநல்லூர், டிச. 18-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே அச்சம்பட்டி கிராமத்தில் மாவட்ட ஊராட்சி நிதி ரூ.ஒரு கோடியே 96 லட்சம் மதிப்பீட்டில் அச்சம்பட்டி கால்வாய் முதல் வலசை கிராம ஊரணி கால்வாய் வரை சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் புதிய தார் சாலை அமைக்க பூமி பூஜை நடைபெற்றது.

இதில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணிகளை தொடங்கி வைத்தார். யூனியன் ஆணையாளர்கள் வள்ளி, கதிரவன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், அருண் விஜயன், பேரூராட்சி தலைவர் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், துணைத்தலைவர் சுவாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி செயலர் முருகேஸ்வரி வரவேற்றார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, சேது சீனிவாசன், பேரூராட்சி கவுன்சிலர் அம்சவல்லி கண்ணன் மற்றும் திமுக மாவட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர். ஒப்பந்ததாரர் குமார் நன்றி கூறினார்.

## நத்தம் பகுதி சிவாலயங்களில் பிரதோஷ விழா கோலாகலம்



**நத்தம், டிச. 18-**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் மார்கழி மாத பிரதோஷ விழா நடந்தது. இதையொட்டி நந்தி சிலைக்கு பால்,பழம்,பன்னீர், விபூதி,சந்தனம்,இளநீர்,தீர்த்தம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடும் நடந்தது.பின்னர் மூலவர் செண்பகவல்லி சமேத கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதைப்போலவே நத்தம் அருகே குட்டூரில் உள்ள உண்ணாமலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலிலும் பிரதோஷ விழா நடந்தது.இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரமும், அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

## வேலாயுதபுரம் கிராமத்தில் வேளாண்மை கல்லூரி மாணவர்கள், விவசாயிகளுக்கு விழிப்புணர் பயிற்சி



**அருப்புக்கோட்டை, டிச. 18-**

வ.உ.சி. வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் பாளயம் பட்டி கிராமத்தில் விவசாயிகளுடன் விழிப்புணர்வு பயிற்சி 65 நாள் நடைபெற்றது. அதேபோல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலை யத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவர்கள், தங்களின் கிராமப்புற வேளாண்மைப் பயிற்சியைத் அருப்புக்கோட்டை அருகே வேலாயுதபுரம் கிராமத்தில் முகாமி விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

ஆய்வு பயிற்சியின் தொடக்க நிகழ்வாக, உழவரை தேடி வேளாண்மை முகாமில், வேளாண் துணை இயக்குனர் சுந்தரவல்லி தலைமையில், மாணவர்கள் அந்த கிராமத்தின் விவசாயிகளின் முன்னிலையில் 3G கரைசல் மற்றும் சாண எரிவாயு எனும் தொழில் நுட்பத்தை விவசாயிகளுக்கு செய்முறை செய்து காட்டினர். மேலும் விவசாயிகளிடம் வேளாண் அலுவலர்கள் விதை நேர்த்தியை பற்றியும் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். நிகழ்வில் வ.உ.சி. வேளாண்மை கல்லூரி மாணவர்கள், வேளாண்மை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## நத்தம் அருகே கார் கவிழ்ந்து விபத்து

**நத்தம், டிச. 18-**

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தை சேர்ந்தவர் ஸ்ரீராம்(30).இவர் தனது காரில் அம்மா லதா (50), மற்றும் தம்பி கீர்த்திகுமாருடன் (26) துக்க நிகழ்வுக்காக மதுரை நோக்கி சென்று கொண்டிருந்தார்.நத்தம் அருகே மதுரை- துவரங்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள குட்டுப்பபட்டி- புதூர் பகுதியில் கார் வந்து கொண்டிருந்த போது காரின் பின் பக்க டயர் வெடித்தது. இதில் கார் தலைகுப்புற கவிழ்ந்து சாலையோர பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.இதில் காரில் வந்த தனியார் நிறுவன ஊழியர் கீர்த்திகுமார் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பலியானார்.மேலும் காரில் வந்த லதாவிற்கு பலத்த காயம் ஏற்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.மேலும் இச்சம்பவம் குறித்து போலீஸ்- இன்ஸ்பெக்டர் பொன்.குணசேகரன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

### மேலூர், கொட்டாம்பட்டியில்
## தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் ஊக்குவிப்பு முகாம்



**மேலூர், டிச. 18-**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டியில் தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் குறித்த ஊக்குவிப்பு முகாம் மாவட்ட தொழில் மைய புள்ளி விவர ஆய்வாளர் சு. பாண்டியராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக இந்தியன் வங்கி முதன்மை மேலாளர் நிஷாந்தி, கொட்டாம்பட்டி யூனியன் பேங்க் ஆப் இந்தியா கிளை மேலாளர் சுபாஷ் வட்டார இயக்க மேலாளர் ராமு வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் அலுவலர்கள் பங்கேற்றனர்.

அதனைத் தொடர்ந்து இம்முகாமில் தொழில் மைய ஆய்வாளர் பேசுகையில் தமிழ்நாடு தொழில் முனைவோர் திட்டத்தில் திட்ட மதிப்பீடு ரூபாய் 10 லட்சம் அதில் 25 சதவீதம் மானியமாகவும் கூடுதல் மானியம் ரூபாய் 2 லட்சம் வழங்கப்படுகிறது. மேலும் வியாபாரம் சேவை உற்பத்தி போன்ற தொழில்களில் ஆர்வம் காட்டும் பெண்களுக்கு வயது 18 முதல் 55 வரை இருத்தல் வேண்டும் கல்வித் தகுதி தேவையில்லை என்றும் போன்ற பல்வேறு விபரங்களை எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டப் பணியாளர்கள் உட்பட ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் சுமார் 65 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 2026-ல் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் ஊழல் குற்றச்சாட்டில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுவர்
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேச்சு



**மதுரை, டிச 18-**

மதுரை மாநகராட்சியில் சொத்துவரி முறைகேட்டில் உரிய விசாரணை நடத்தவில்லை என்று கூறி மதுரையில் அ.தி.மு.க.சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசியதாவது-

நான் பேசுவதை நீங்கள் கேட்க வேண்டும் என மறைந்த முதல்வர் அம்மாவும், மதுரை மீனாட்சியும் எங்களை இயற்கையின் மூலம் வாழ்த்துகிறார்கள். மதுரை மாநகராட்சியில் எதற்கெடுத்தாலும் காசு கேட்கிறார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என அண்ணா சொன்னார். தி.மு.க. தலைவராக கலைஞர் பதவியேற்ற பின் அண்ணா சொன்ன கூற்றை மறந்து கலெக்ஷன், கமிஷன், கரெப்ஷன் என மாற்றி விட்டார்கள்.

மதுரையில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல்வேறு திட்டங்களை வெறும் பெயர் மட்டும் வைத்து வருகிறார்கள்.


தி.மு.க. ஆட்சி அமைத்த பின்பு 2 ஆண்டுகளில் நிலம் கையகப்படுத்தப்பட்டு மதுரை விமான நிலையம் சர்வதேச தரத்தில் உயர்த்தப்படும் என அமைச்சர் பிடிஆர் சொன்னார்.

இதுவரை செயல்படுத்தவில்லை. நமக்கு பிறகு வந்த திருச்சி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாகி விட்டது. மதுரைக்கு மெட்ரோ திட்டம் வரக்கூடாது என திட்டமிட்டு தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது. ஒரு திட்டம் செயல்படுத்த வேண்டும் என்றால் மத்திய அரசு பல கேள்விகளை கேட்க தான் செய்வார்கள்.அதை சொல்ல வேண்டியது தானே, அதை விட்டு விட்டு மத்திய அரசை குறை சொல்கிறார்கள். மதுரைக்கு அறிவித்த டைடல் பார்க் திட்டம் செயல்படுத்தவில்லை.

அண்ணாவையும், திராவிட கொள்கையையும் அ.தி.மு.க. பின்பற்றுவதில்லை என துணை முதல்வர் உதயநிதி பேசுகிறார். எங்களுக்கா திராவிட கொள்கை இல்லை? நாங்களா அண்ணாவை பின்பற்றவில்லை? தி.மு.க. அண்ணா வழியில் என்ன செய்தார்கள்? ஒரு திட்டத்தை கூட தி.மு.க. அரசு செயல்படுத்தவில்லை.

தி.மு.க. வைக்கும் பேனரில் கலைஞர் இருந்த இடத்தில் இன்று ஸ்டாலின் உள்ளார். ஸ்டாலின் உள்ள இடத்தில் உதயநிதி உள்ளார். நாளை அந்த இடத்தில் இன்பநிதி இருப்பாரே தவிர அண்ணா எங்கே? .2026- ல் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் ஊழல் குற்றச்சாட்டில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுவார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

### மதுரை மாநகராட்சி மாமன்ற கூட்டம் நடைபெறாததால்
## பிற மாமன்ற உறுப்பினர்களின் பதவி பறிபோக வாய்ப்புள்ளது
### வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. பேச்சு



**மதுரை, டிச 18-**

மதுரை மாநகராட்சியில் சொத்துவரி முறைகேட்டில் உரிய விசாரணை நடத்தவில்லை என்று கூறி மதுரையில் அ.தி.மு.க.சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் வி.வி.ராஜன் செல்லப்பா பேசியதாவது- மதுரை மாநகராட்சி மேயர் ராஜினாமா செய்து இரண்டு மாதங்களாகி விட்டது.மண்டல தலைவர்கள் 5 பேர் ராஜினாமா செய்து 5 மாதமாகிவிட்டது.கடந்த 3 மாதங்களாக மதுரை மாநகராட்சி மாமன்ற கூட்டம் நடைபெறாததால் பிற மாமன்ற உறுப்பினர்கள் பதவி பறி போகும் வாய்ப்பு உள்ளது. மாநகராட்சியில் மேயர் தேர்தல் நடத்தி மேயரை நியமனம் செய்ய வேண்டும். மதுரை மாநகராட்சியில் அ.தி.மு.க. - தி.மு.க.வுக்கு பல்வேறு வேறுபாடுகள் உள்ளது. தி.மு.க. ஒன்றுமே செய்யவில்லை. கடந்த 4.5 ஆண்டுகள் கவலைப்படாமல் இப்போது மதுரையின் வளர்ச்சியை பற்றி கவலைப்படுவதாக முதல்வர் கூறுகிறார். மதுரைக்கு தி.மு.க. அரசு ஒன்றுமே செய்யவில்லை. நாளை மறுநாள் கிறிஸ்துமஸ் விழா முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு தொகுதியில் நடத்தி நெருக்கடி உண்டாக்க நினைக்கிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது பல திட்டங்களை மதுரை மாநகராட்சியில் செயல்படுத்தியுள்ளோம். தேர்தல் தேதி அறிவிக்க வெறும் 80 நாட்களே உள்ள நிலையில் மாநகராட்சி ஊழலை மறைக்க தி.மு.க. அரசு மதுரை மீது கவனம் செலுத்தி வருகிறது.அ.தி.மு.க. வை பார்த்து எள்ளி நகையாடுகிறார்கள். என்ஜின் இல்லாத கார் என்று துணை முதல்வர் சொல்கிறார்.

அ.தி.மு.க. கார் இல்லை மதுரை - சென்னை செல்லும் பாண்டியன் எக்ஸ்பிரஸ், ரயில் ஏறினால் கோட்டைக்கு தான் செல்லும். 2026-ம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

### வரும் தேர்தலில் அருப்புக்கோட்டை
## சட்டமன்ற தொகுதியில் போட்டியிட நகர செயலாளர் சோலை சேதுபதி விருப்ப மனு



**அருப்புக்கோட்டை, டிச. 18-**

அ.தி.மு.க. தலைமை கழகம் டிசம்பர் 15 முதல் 25-ம் தேதி வரை தமிழக முழுவதும் உள்ள சட்டமன்ற தொகுதியில் போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் தலைமை கழகத்தில் விருப்பமான தாக்கல் செய்ய பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட அருப்புக்கோட்டை நகர கழக செயலாளர் சோலை.சேதுபதி மாவட்ட கழகச் செயலாளர் ரவிச்சந்திரன் முன்னிலையில் தலைமை கழகத்தில் முன்னாள் அமைச்சர்கள் உதயகுமார், வைகைச் செல்வன், கோகுல் இந்திரா, தளவாய் சுந்தரம் வாங்க செல்வன் ஆகியோரிடம் விருப்பம் மனுவை தாக்கல் செய்தார்.

நிகழ்ச்சியில் விருதுநகர் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் ஜெயபெருமாள், ஒன்றிய கழகச் செயலாளர் போடம்பட்டி சங்கரலிங்கம், தேவதுரை, சந்திரன், கருப்பசாமி, மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் சவுண்டையா, நகர மகளிர் அணி பிரேமா, இலக்கிய அணி சீனிவாசன், அண்ணா தொழிற்சங்க நகரச் செயலாளர் சரவணகுமார், நகர ஐடி வின் செயலாளர் தேவராஜ், மற்றும் பிற அணி நிர்வாகிகள் சத்ய ராஜன், செல்வம், மோகன்ராஜ், ராம்குமார், ரஜினி கருப்புசாமி, குருசாமி, காளி ராஜ் ,முத்துகிருஷ்ணன், காளிராஜன், செல்வம், பிரவீன் உட்பட பலர் உடன் இருந்தனர்.

## மேலூரில் ரஜினி பிறந்தநாளையொட்டி பொதுமக்களுக்கு பிரியாணி விருந்து

**மேலூர், டிச. 18-**

மேலூரில் நடிகர் ரஜினி காந்தின் 75-வது பிறந்த நாளை முன்னிட்டு காஞ்சிவனம் சுவாமி கோவில், சிவன் கோவில்களில் சிறப்பு பூஜை நடந்தது. ரஜினி மன்றத்தினர் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். அதையடுத்து ஆயிரம் பேருக்கு பிரியாணி விருந்து வழங்கி கொண்டாடினர். மேலூர் நகர, ஒன்றிய கொட்டாம்பட்டி ஒன்றியத்தினர் சார்பில் விழா நடந்தது. விழாவில் மேலூர் நகர்செயலாளர் ராஜபாண்டியன், தலைவர் ரஜினி சண்முகம், ஒன்றிய தலைவர் சுப்புராஜா, செயலாளர் பாலா, நிர்வாகிகள் பாண்டி, வீரபாண்டி, மன் னன், முருகன், காஜா, வெங்கடேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காலநிலை மாற்றத்திற்கான ஆட்சிமன்றக் குழுவின் 3-வது கூட்டத்தின் போது, நீலக் கார்பன் சேமிப்பில் தமிழ்நாட்டின் கடல்சார் வாழிடங்களின் பங்கு குறித்த தொழில்நுட்ப அறிக்கை மற்றும் தமிழ்நாட்டின் கடற்கரையில் கைவிடப்பட்ட தொலைந்து போன மீன்பிடி உபகரணங்கள் உட்பட கடற்கரை கழிவுகளின் மதிப்பீடு அளவு ஆதாரங்கள், மாசுபாடுநிலை மற்றும் மேலாண்மை உத்திகள் தொடர்பான முன்னெடுப்பு அறிக்கை ஆகியவற்றை வெளியிட்டார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி நேற்று சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட இலவச மடிகணினிகளை பெற்றவர்களை சந்தித்து உரையாடினார். அப்போது மடிகணினியை பெற்றவர்கள் தாங்கள் வாழ்க்கையில் உயர எவ்வாறு மடிகணினி பயன்பட்டது என்பது குறித்து எடுத்துரைத்து அவருக்கு நன்றி தெரிவித்தனர்.




தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று, சென்னை அண்ணா அறிவாலயத்தில் ‘உடன்பிறப்பே வா’ என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், சிங்காநல்லூர் மற்றும் கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

# வேலூர் பொற்கோவிலில் ஜனாதிபதி சாமி தரிசனம்

வேலூர், டிச. 18-

வேலூர் ஸ்ரீபுரம் பொற்கோவிலில் ஜனாதிபதி திரௌபதி முர்மு நேற்று சாமி தரிசனம் செய்தார். கோவில் வளாகத்தில் மரக்கன்று நட்ட அவர் சக்தி அம்மாவிடம் ஆசி பெற்றார்.

ஜனாதிபதி திரௌபதி முர்மு கர்நாடகா, தமிழ்நாடு, தெலுங்கானா மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தநிலையில் நேற்று காலை திருப்பதி ரேணிகுண்டா விமான நிலையத்திற்கு வந்தார். அங்கிருந்து ராணுவ ஹெலிகாப்டர் மூலம் வேலூர் ஸ்ரீபுரம் தங்க கோவிலுக்கு வருகை தந்தார். அவரை தமிழக கவர்னர் ஆர்.



என்.ரவி, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, வேலூர் கலெக்டர் சுப்புலெட்சுமி, போலீஸ் சூப்பிரண்டு மயில்வாகனன், மேயர் சுஜாதா ஆகியோர் வரவேற்றனர்.

கோவில் வளாகத்தில் அமைந்துள்ள 1,700 கிலோ வெள்ளியால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் விநாயகரையும், 70 கிலோ தங்கத்தால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மகாலட்சுமியையும் தரிசனம் செய்தார். சீனிவாசா பெருமாள் சன்னதியில் தரிசனம் செய்த பின்னர் சொர்ண லட்சுமிக்கு அபிஷேகம் செய்தார். பின்னர் கோவில் வளாகத்தில் மரக்கன்று நட்டார். சக்தி அம்மாவிடம் ஆசி பெற்றார்.

தங்க கோவிலை பார்வையிட்டு சாமி தரிசனம் செய்தார். ஜனாதிபதி வருகையையொட்டி வேலூரில் டிடோன்கள் பறக்க தடை செய்யப்பட்டது. வேலூர், அணைக்கட்டு சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டிருந்தது. கோவில் வளாகம், ஸ்ரீபுரம் பகுதிகளிலும் 2 அடுக்கு பாதுகாப்புடன் 1,700-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். ஜனாதிபதி வருகையை முன்னிட்டு காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. தரிசனம் முடிந்ததும் ஜனாதிபதி மீண்டும் ஹெலிகாப்டர் மூலம் திருப்பதிக்கு புறப்பட்டு சென்றார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை திருவான்மியூரில் நடைபெற்ற தியாகராயநகர் கிழக்கு பகுதி தி.மு.க. செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெ.கருணாநிதி யின் மகன் சிபி - வர்ஷா (எ) வர்ஷலட்சுமி இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# இதுவரை ரூ.11.40 லட்சம் கோடி.... (1-ம் பக்க தொடர்ச்சி)

பிறகு இந்த வளர்ச்சி விகிதம் ஏற்பட்டு இன்றைக்கு அது 16 சதவீதத்தைத் தொட்டிருக்கிறது.

### மிக பெரிய உற்பத்தித்துறை....

மிகப்பெரிய ஒரு வளர்ச்சியும் திராவிட மாடல் ஆட்சியினுடைய வெற்றிக்கு மற்றும் ஒரு எடுத்துக்காட்டாக இன்றைக்கு இது விளங்கி இருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த வளர்ச்சியிலே உற்பத்தித் துறை மிகப்பெரிய ஒரு பங்களிப்பினை செய்திருக்கிறது. இந்த நான்கு ஆண்டுகளிலே நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால் தமிழ்நாட்டின் இந்த பொருளாதாரம் ஜி.எஸ்.டி.பி.யின் வளர்ச்சி என்பது இந்த உற்பத்தி துறையை பொறுத்தமட்டிலே 1.46 லட்சம் கோடியாக இருந்தது. இரண்டு மடங்காக இன்றைக்கு அது பெருகி இருக்கிறது.

### 40,000 தொழிற்சாலைகள்....

அதேபோல மகாராஷ்டிராவை நீங்கள் ஒப்பிட்டால், அது ஒரு வளர்ச்சி அடைந்த உற்பத்திதுறை மாநிலமாக இருக்கக்கூடியது. அது 0.71 லட்சம் கோடியாக இருக்கக் கூடிய இந்த மகாராஷ்டிரத்தை விட தமிழ்நாடு உற்பத்தி துறையிலே மிகப்பெரிய ஒரு முன்னேற்றத்தை இன்றைக்கு கண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு காரணம் தமிழ்நாட்டிலே இன்றைக்கு பார்ப்பீர்கள் என்று சொன்னால் ஏறத்தாழ 40,000 மேற்பட்டிருக்கக் கூடிய தொழிற்சாலைகள் இருக்கிறது. அவற்றிலே ஏறத்தாழ 27.7 லட்சம் பேர் அங்கே வேலை வாய்ப்பு இருக்கக் கூடிய நிலைமைகள் வந்திருக்கிறது.

### 53 சதவீதம் பங்களிப்பு

இந்த பொருளாதார வளர்ச்சியில் குறிப்பாக கட்டுமானத்துறை என்பதும் இந்த வளர்ச்சிக்கு மிகுந்த அளவிலே உதவி செய்யக்கூடிய வகையில் 23- 24ஆம் ஆண்டுகளிலே 15.93 சதவிகிதம். அதேபோல 24 -25ஆம் ஆண்டுகளில 11 சதவீதம் என்று அதற்கான பங்களிப்பை தந்திருக்கிறது. அதேபோல சேவைத்துறையை எடுத்துக் கொண்டால் தமிழ்நாட்டிடைய வளர்ச்சியில் ஏறத்தாழ 53 சதவீதம் தன்னுடைய பங்களிப்பை செலுத்தி உண்மையான வளர்ச்சி என்கின்ற வகையிலே 24 -25ஆம் ஆண்டுகளில் நம்முடைய சேவைத்துறை 11.3 சதவீம் அளவிற்கு தன்னுடைய பங்களிப்பை தந்திருக்கிறது.

### புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்....

குறிப்பாக இந்த 1 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நாம் எட்ட வேண்டும் என்று சொன்னால் ஏற்றுமதியிலே நாம் மிகப்பெரிய ஒரு முன்னேற்றத்தை காண வேண்டும். அதேபோல நம்முடைய முதல்வரின் தொடர் முன்னெடுப்புகளால் பல்வேறு உலக நாடுகளிலே பயணம் செய்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு அதன் வாயிலாக ஏறத்தாழ முதலீட்டின் சந்திப்பின் மூலமாக 11 லட்சத்து 40,731 கோடி ரூபாய் முதலீடு பெறப்பட்டு 1016 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

### இளைஞர்களுக்கு வேலை...

ஏறத்தாழ 34 லட்சத்து 8522 இளைஞர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்றுமதியை பொறுத்தமட்டில் அது நம்முடைய 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நாம் பெறுவதற்கு இந்த அடிப்படையாக அமைந்திருக்கக்கூடிய தமிழ்நாட்டினுடைய ஏற்றுமதி சாதனை மத்திய அரசினுடைய தரவுகளின் படி 2021 - 22 ஆம் ஆண்டிலே 1.86 பில்லியன் டாலராக இருந்தது. 22-23ஆம் ஆண்டில் 5.37 பில்லியன் டாலராகவும் 23-24 நிதி ஆண்டில் 9.56 பில்லியன் டாலராகும், கடந்த ஆண்டு 24 -25 நிதி ஆண்டில் 14.65 பில்லியன் டாலராக இந்த மின்னணு பொருள்களின் ஏற்றுமதி மூன்று ஆண்டுகளிலே ஏறத்தாழ ஏழு மடங்கு அதிகரித்து, 200 சதவீதமாக உயர்ந்திருக்கிறது.

### ஒட்டுமொத்த குறியீடாக....

ஒட்டுமொத்தமாக நீங்கள் பார்ப்பீர் என்று சொன்னால் தமிழ்நாட்டினுடைய இந்த நீடித்த ஒரு நிலையான வளர்ச்சி என்பது ஒட்டுமொத்தமாக நம்முடைய 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் நாம் அடைவதற்கு நம்முடைய முதல்வர் முன்னெடுப்பால் நடைபெற்று சாத்தியமாக இருக்கிறது. அதனுடைய இன்றைக்கு ஒட்டுமொத்த குறியீடாக இந்த 16 சதவீதம் வளர்ச்சியை நம்முடைய ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா கொடுத்திருப்பதும் நம்முடைய தமிழ்நாட்டினுடைய நிதி மேலாண்மைக்கு நம்முடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு நம்முடைய சமூக வளர்ச்சிக்கு நம்முடை முதலமைச்சருடைய தலைமையிலான திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்திருக்கக்கூடிய ஒரு மாபெரும் நற்சான்று ஆகும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# எத்தியோப்பியாவின் உயரிய விருது.... (1-ம் பக்க தொடர்ச்சி)

எத்தியோப்பிய மாணவர்களுக்கான உதவி தொகையை இரட்டிப்பாக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம் என்று கூறினார்.

தொடர்ந்து அவர் பேசும் போது, பன்முக தன்மையில் ஒற்றுமைக்கான அடையாளங்களாக, மொழிவளம் மற்றும் பாரம்பரியங்களை கொண்ட இரு நாடுகளும் உள்ளன. அமைதி மற்றும் மனித இன நலனுக்கான செயல்பாட்டில் ஈடுபடும் ஜனநாயக சக்திகளாக இந்தியாவும் எத்தியோப்பியாவும் உள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் உயரிய விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. அந்நாட்டின், தி கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா என்ற உயரிய விருது அவருக்கு அளிக்கப்பட்டது. பிரதமருக்கு, எத்தியோப்பிய பிரதமர் அபி அகமது இந்த விருது வழங்கி கவுரவித்து உள்ளார். இந்த விருது பெறும் முதல் உலக தலைவர் என்ற பெருமையை பிரதமர் மோடி பெற்றுள்ளார். பிரதமர் மோடிக்கு வெளிநாடுகளில் கிடைக்க பெற்ற 28-வது உயரிய விருது இதுவாகும்.

இந்தியர்கள் அனைவரின் சார்பாக, இதனை பணிவுடன் நான் ஏற்று கொள்கிறேன் என பிரதமர் மோடி அப்போது குறிப்பிட்டார். உலகின் மிக தொன்மையான மற்றும் செழிப்பான நாகரிகம் கொண்ட நாட்டின் இந்த விருது வழங்கப்பட்டது மிக சிறந்த பெருமைக்குரிய விசயம் என குறிப்பிட்டார்.

இதற்கான அங்கீகாரம், இருதரப்பு நல்லுறவை வடிவமைக்க மற்றும் வலுப்படுத்திய எண்ணற்ற இந்தியர்களையே சேரும். இதனை 140 கோடி இந்தியர்களுக்கு அர்ப்பணிக்கிறேன் என்றும் கூறினார்.



சென்னை, நுங்கம்பாக்கம், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரிய கருத்தரங்கு கூட்ட அரங்கில் நேற்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில், தொழிலாளர் துறை அலுவலர்களின் பணி திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தின் தலைவர் பொன் குமார், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் வீர ராகவ ராவ், ஆணையர் சி.அ.ராமன், தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகராட்சியில் சொத்துவரி விவகாரத்தில் உரிய விசாரணை நடத்தவில்லை என்று கூறி மதுரை மாநகர், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் பழங்காநத்தத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ, வி.வி.ராஜன்செல்லப்பா எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு கோஷங்களை எழுப்பினர்.